2nd copy ✓ Copy write 11.1.68

இறப்புச்சீர்.

ஐயர் (பிராமணர்) [redacted]

சொல்லியவர்: N. சுந்தரக் குருக்கள்
தேலப்பாளையம்.

இறப்பவரின் உயிர் போவது தெரிந்ததும் அவரின் மூத்த மகன் வீட்டின் ஒருபக்கமாக 9 தெர்ப்பைபுல் போட்டு அதன்மேல் ஒருபெரிய துண்டை விரித்துப் போட்டு மூத்த மகனும் மற்றும் இருக்கும் மகன்களும் சேர்ந்து உயிரை விட துடித்துக் கொண்டிருக்கும் அவர்கள் அப்பாவை எடுத்து துண்டு விரித்துப்போட்டிருப்பதுமேல் படுக்க வைப்பார்கள். பிறகு, மூத்தமகன் ஒரு 4 அணா பணத்தை அவர் அப்பாவின் வாயில் போட்டு அதன் மேல் பசுவின் பால் கொஞ்சம் ஊற்றுவார். அதற்குள் இறப்பவரின் உயிர் போய் விடும். உயிர் போனவுடன் இறந்து போனவரின் மூத்த மகனும், அவர் மனைவியும் மற்றும் இறந்து போனவரின் மகள் ஆக மூன்று பேரும் சேர்ந்து ஒரு சொம்பில் தண்ணீர் கொண்டு வீட்டின் முன் வாசலுக்குச் சென்று சொம்புத்தண்ணீரை வாசலில் ஊற்றி விட்டு மூவரும் தெற்கு முகமாக நின்று அழுவார்கள்.

குறிப்பு (மேற்கண்ட முறையில் சொம்புத் தண்ணீரை வாசலில் ஊற்றி விட்டு அழுவதின் காரணம் என்னவென்றால்,
எமன் வந்து ஒரு உயிரைக் கொண்டு போய்விட்டான். போன எமன் மறுபடியும் அந்த வீட்டிற்கு திரும்பி வரக்கூடாது என்பதற்காகவும் எமனுடைய உலகம் தெற்குதான் இருக்கிறது என்பதை ஒரு பழக்கமாகக் கொண்டுதான் தெற்கு முகமாக நின்று அழுவார்களாம். வாசலில் தண்ணீரை ஊற்றுவது எமன் அந்த வீட்டுக்கு வந்துபோன கால் தாரை (அடையாளம்) மறைந்து போக வேண்டுமென்றுதான் சொம்புத்தண்ணீரை வாசலில் ஊற்றுவார்களாம்.)

பிறகு, இறந்து போன பிணத்திற்கு வாய்க்கட்டு, கைக்கட்டு, கால் கட்டு இவைகளையெல்லாம் துணியால் கட்டுவார்கள். பிறகு, பிணத்தின் நெற்றியில் விபூதி பூசி சந்தனப் பொட்டு வைத்து ஒரு வேஷ்டியால் பிணத்தின் முகத்தை விட்டு மற்ற எல்லா பாகத்தையும் வேஷ்டியால் மூடிவிடுவார்கள். பிறகு, பிணத்தின் தலைமாட்டில் ஒரு குத்து விளக்கிற்கு ஒரு திரி போட்டு பொருத்தி வைப்பார்கள். பிறகு ஒரு சிறிய பாத்திரத்தில் பச்சரிசி கால்படி போட்டு அத்துடன் மூன்று சிறிய வெல்லங்கள் போட்டு கிண்டாவுடன் (பாத்திரம்) பிணத்தின் தலைமாட்டில் வைத்து விடுவார்கள். இதை வாய்க்கரிசி என்று சொல்வார்கள்.

இந்த வாய்க்கரிசி போட்டு வைப்பது ஐயர் பெண்களில் யாரோ ஒருவர் செய்யலாம். பிறகு, அங்குள்ள பெண்கள் எல்லோரும் பிணத்தின் அருகில் ஒருபக்கம் வட்டமாக உட்கார்ந்து அழுவார்கள். ஆண்கள் எல்லாம் நின்று கொண்டே அழுவார்கள்.

பிறகு, முக்கியமான உறவினர்களுக்கெல்லாம் ஐயர்களில் யாரோ இரண்டு பேர் சென்று எழவு செய்தி சொல்லி விட்டு வருவார்கள். முக்கிய உறவினர்கள் ரொம்ப தூரத்தில் இருந்தால் அவர்களுக்கெல்லாம் உடனே வந்து சேரும்படி தந்தி மூலம் செய்தி அனுப்புவார்கள். உறவினர்களுக்கெல்லாம் செய்தி போனதும் எல்லோரும் வந்து சேருவார்கள். எல்லோரும் வந்து சேர்ந்தவுடன் பிணத்தை அடக்கம் செய்வதற்கு தேவையான சாமானங்களையெல்லாம் இறந்து போனவருடைய பங்காளிகள் தயார் செய்வார்கள். சாமானங்கள் தயார் செய்வதற்குள் யாரோ ஒரு ஐயர் புரோகிதர் இருக்கும் ஊருக்குச் சென்று புரோகிதரை கூட்டி வருவார். இதற்குள் பண்டாரம் ஒருவரைக் கூட்டி வந்து சங்கு, சேகண்டி வாத்தியம் செய்யச் சொல்வார்கள். பண்டாரம் சங்கு, சேகண்டி வாத்தியம் செய்து கொண்டிருப்பார். பிறகு வீட்டின் வாசலில் குடம் (பித்தளை அல்லது செம்பு) எடுத்து வைத்து ஒரு பித்தளைச் சொம்பும் எடுத்து வைப்பார்கள். பிறகு, இறந்து போனவரின் மகள், மருமகள், பங்காளியின் மனைவி ஒருத்தி ஆக, மூன்று பேரும் வந்து மூன்று குடத்தையும் மூன்று பேரும் எடுத்துக் கொள்வார்கள். இறந்து போனவரின் மூத்த மகன் வந்து சொம்பை எடுத்துக் கொண்டு உறவினர்களுடனும், சங்கு வாத்தியத்துடன் குளிப்பாட்டுவதற்கு தண்ணி கொண்டு வருவதற்கு கிணற்றுக்குச் செல்வார்கள்.

கிணற்றுக்குச் சென்றதும் குடம் கொண்டு போன மூன்று பெண்களும் இறந்தவரின் மூத்தமகன் ஆக நான்கு பேரும் குளித்துக் கொண்டு பெண்கள் மூன்று பேரும் அப்படியே ஈரச்சேலையுடன் தலைமயிரை விரித்துப்போட்டு குடத்தில் தண்ணீர் எடுத்து இடுப்பில் வைத்துக் கொள்வார்கள். இறந்து போனவரின் மூத்த மகனும் அப்படியே ஈரவேஷ்டியுடன் தலையை விரித்துப் போட்டு சொம்பில் தண்ணீர் எடுத்து அதை வலது கையில் பிடித்துக் கொண்டு முன்னால் செல்வார் அவருக்குப் பின்னால்

மூன்று பெண்களும் குடத்துத்தண்ணீரை இடுப்பில் வைத்துக் கொண்டு கட்டியிருக்கிற சேலையின் ஒரு நுனியை வாயில் வைத்து அழுது கொண்டே பின்னில் வருவார்கள். அதற்குப் பின்னால் உறவினர்கள் எல்லோரும் வருவார்கள். வீட்டுக்கு வந்ததும் கொண்டு வந்த தண்ணீரை வீட்டின் நடுவாசலில் வைப்பார்கள். பிறகு, வீட்டின் முன் வாசலில் ஒரு இடத்தில் மூன்று விறகு வைத்து நெருப்பு பற்ற வைத்து வைப்பார்கள். பிறகு, நடுவாசலில் மூன்று கல் வைத்து ஒரு அடுப்புக் கூட்டி வைத்து இறந்துபோனவரின் மூத்தமகன் ஒரு பாத்திரத்தில் அரைப்படி அரிசி போட்டு, தண்ணீர் ஊற்றி நடுவாசலில் கூட்டிய அடுப்பில் வைத்து பொங்கல் வைப்பார். மேற்கண்ட பொங்கலை பிண்டம் என்று சொல்வார்கள்.

## குளிப்பாட்டுதல்.

வாசலில் ஒரு துணியை விரித்து சில ஆண்கள் சேர்ந்து பிணத்தை தூக்கி வந்து வாசலில் விரித்த துணியின் மேல் படுக்க வைப்பார்கள். அந்த பிணத்தின் அருகில் அவர் மனைவியையும் கூட்டி வந்து உட்கார வைப்பார்கள். பிறகு, இறந்து போனவரின் மூத்த மகன் வந்து அங்கு கிண்ணத்தில் வைத்துள்ள நல்லெண்ணெயை கையில் தொட்டு மூன்று பிணத்தின் தலையில் துடைப்பார். பிறகு, பாத்திரத்தில் வைத்திருக்கும் சீயக்காய்த்தூளையும் கையில் தொட்டு பிணத்தின் தலையில் மூன்று முறை துடைப்பார். பிறகு, இறந்துபோனவரின் இளைய மகன்கள், பெண்கள் எல்லோரும் வந்து முன்போலவே பிணத்தின் தலையில், எண்ணெ சீயக்காய் துடைப்பார்கள். மேலும் இறந்து போனவரின் பங்காளிகள், மாமன் மைத்துனர்கள் இஷ்டப்பட்டவர்கள் எல்லோரும் வந்து பிணத்துக்கு எண்ணெ, சீயக்காய் இவைகள் துடைப்பார்கள். எண்ணெ, சீயக்காய் தேய்த்து முடிந்ததும் மீதி இருக்கும் எண்ணெ சீயக்காய் இவைகளை யெல்லாம் எடுத்து பிணத்தின் மேல் ஊற்றி விடுவார்கள். பிறகு, அங்கு வைத்திருக்கும் தண்ணீரில் மூத்தமகன் ஒரு குடம் தண்ணீரை யெடுத்து பிணத்தின் தலையிலிருந்து கால் வரை ஊற்றுவார். மறுபடி பங்காளி ஒருவர் வந்து ஒரு குடம் தண்ணீரை எடுத்து பிணத்தின் மேல் ஊற்றி நன்றாக சுத்தம் செய்வார். பிறகு, ஒரு குடம் தண்ணீரை எடுத்து இறந்து போனவரின் அருகில் உட்கார வைத்திருக்கும் அவர் மனைவியின் தலையில் ஊற்றுவார்கள்.

பிறகு பங்காளிகள் வைத்திருக்கும் வெள்ளைத்துணியை (புதியதுணி) இதை கோடி என்று சொல்வார்கள். அந்த கோடித்துணியை இறந்து போனவரின் மூத்தமகன் வந்து எடுத்து பிணத்தின் மேல் தலைமுதல் கால் வரை போட்டு மூடுவர். அப்போது அங்குள்ள பங்காளிகள் யாரோ ஒருவர் பிணத்தின் மேல் போட்ட கோடித்துணியை பிணத்தின் கால்பக்கம் ஒரு முளத்துணியை கிழித்து எடுத்து வைத்து விடுவார். பிறகு, பிணத்தின் அருகில் உட்கார்ந்திருக்கும் அவர் மனைவிக்கும் ஒரு புதிய சிகப்புச்சீலை ஒன்றை இறந்தவரின் பங்காளி யின் மனைவி எடுத்து வந்து அந்தச்சீலையை இறந்தவரின் தலையில் முக்காடு போட்டுவிடுவாள். பிறகு, அந்தப் பெண்ணின் நங்கை, கொழுந்தி இருவர் வந்து இறந்தவரின் மனைவியை கட்டி அழுவார் கள்.

பிறகு, இறந்து போனவரின் வலதுபக்கம் ஒரு வாழை இலையை அதன் நுனியை தெற்கு முகமாக வைத்துப் போடுவார்கள். அந்த இலையில் வாசலில் வைத்த பொங்கல் சாதத்தை எடுத்து அந்த இலையில் போடுவார் இறந்தவரின் மூத்த மகன். மீதி சாதம் பாத்திரத்தில் இல்லாமல் இலையில் போட்டு விட வேண்டும். பிறகு, அந்த இலை மேல் தேங்காய் பழம் உடைத்து வைத்து, வெற்றிலை பாக்கு வைத்து புரோகிதர் மந்திரம் சொல்ல இறந்தவரின் மூத்த மகன் பிணத்திற்கு பூஜை செய்வார். இவைகள் எல்லாம் நடப்பதற்குள் வீதியில் பாடை (அசந்தி) கட்டி தயாராக வைத்திருப்பார்கள். பிணத் திற்கு பூஜை முடிந்ததும் இறந்துபோனவரின் மகன் தெர்ப்பைப்புல் கொத்தும் கையில் எடுத்து அங்குள்ள முக்கியமான மாமன் மைத் துனர் சிலர் கையில் ஒவ்வொரு தெர்ப்பைப்புல் கொடுப்பார். அப்போது புரோகிதர் மந்திரம் சொல்லிக் கொண்டிருப்பார். இந்த தெர்ப்பைப்புல் வாங்கிய மாமன் மைத்துனர்கள்தான் பிணத்தை மயானத் திற்கு எடுத்துச் செல்ல வேண்டும்.

இறந்து போனவரின் மூத்த மகன் தெர்ப்பைப் புல்லை மாமன் மைத்துனர் கையில் கொடுப்பதின் காரணம் என்னவென்றால் "பிணத்தை எடுத்து பத்திரமாக மயானத்திற்கு கொண்டு வந்து சேர்ப்பது உங்களு டைய பொறுப்பு" என்று சொல்வது போலாகும். பிறகு, ஒரு புதிய மண் சட்டியில் வாசலில் போட்டு வைத்த நெருப்பு கொள்ளிக்கட்டை இவைகள் எல்லாம் எடுத்துப் போட்டு அத்துடன் சந்தனக்கட்டை ஒன்று போடுவார்கள். பிறகு, ஒரு மூங்கில் குச்சியை பாதி-

வரை இரண்டாகப் பிளந்து நெருப்புப் போட்டு வைத்திருக்கும்
சட்டியின் விளிம்பில் பிளந்த குச்சியை வைத்து  இப்படி
கயிறு போட்டு கட்டி வைப்பார்கள்.

படத்தில் NO 1 நெருப்பு, கொல்லிக்கட்டை ஆகியவைகள் இருக்கும் மண்சட்டி.
,, ,, 2 குச்சியை இரண்டாகப் பிளந்து சட்டியில் வைத்து கயிறு போட்டு கட்டியிருக்கும் இடம்.
,, ,, 3 மூங்கில் குச்சி.

பிறகு: தெர்ப்பையை வாங்கியவர்கள் சில ஐயர்கள் பிணத்தை எடுத்துச்சென்று வீதியில் இருக்கும் பாடையில் வைத்து பிணம் அசையாமல் பாடையுடன் சேர்த்து பிணத்தை கட்டி விடுவார்கள். கொல்லிக்கட்டைகள் போட்டு வைத்திருக்கும் சட்டியை புரோகிதர் எடுத்து இறந்து போனவரின் மூத்த மகன் கையில் கொடுப்பார். மூத்த மகன் அதை வாங்கி கைப்பிடி போல் சட்டியில் கட்டியிருக்கும் மூங்கில் குச்சியை கையில் பிடித்துக் கொள்வார். தெர்ப்பை வாங்கியவர்கள் நாலு ஐயர்கள் நாலு பேர் சேர்ந்து பிணத்துடன் பாடையைத் தூக்கி தோளில் வைத்துக் கொள்வார்கள். சங்கு, சேகண்டி வாத்தியம் முன்னும் அதற்குப் பின்னால் கொல்லிச்சட்டி ஏந்திய மூத்த மகனும் அதற்குப் பின்னால் பிணம் இருக்கும் பாடையும், அதற்குப் பின்னால் ஆண்கள் உறவினர்களும், அதற்குப்பின்னால் இறந்தவரின் மனைவியும், மற்ற பெண்களும் இப்படியாகப் புறப்பட்டு மயானத்திற்குச் செல்வார்கள். பிணம் மயானம் போய் சேருவதற்கு முன்பே சில ஆண்கள் அங்கு சென்று பிணத்தை தகனம் (சுடுவது) செய்வதற்கு தேவையான மரக்கட்டைகளை அடுக்கி வைத்திருப்பார்கள். பிணம் மயானம் போய் சேர்ந்ததும் கட்டை அடுக்கியிருப்பதற்கு அருகில் பாடையை இறக்கி வைத்து விட்டு அதற்கு பக்கத்தில் ஒரு வாழை இலை போட்டு அதில் பச்சரிசி போட்டு அதன்மேல் மண் சொம்பில் தண்ணீர் வைத்து அதன்மேல் மாந்தழை வைத்து, அதன்மேல் தேங்காய் ஒன்று வைத்து புரோகிதர் மந்திரம் சொல்ல இறந்தவரின் பெரிய மகன் புண்ணியார்ச்சனை செய்வார். பிறகு, புண்ணியார்ச்சனை செய்த தண்ணீரை எடுத்து அடுக்கியிருக்கும் கட்டைகளின் மேல் மாந்தழையால் தெளிப்பார். பிறகு, தெர்ப்பை புல் வாங்கிய ஐயர்கள் சில பேர் சேர்ந்து பிணத்தை யெடுத்து கட்டைகளின் மீது

தலையை தெற்கும் கால்களை வடக்குமாக வைத்து விட்டு வாய்கட்டு கைக்கட்டு இவைகளை அவிழ்ப்பார்கள். பிறகு, கொண்டு போயிருக்கும் வாய்க்கரிசியை இறந்தவரின் மூத்தமகன் கையில் கொஞ்சம் அள்ளி பிணத்தின் வாயில் போடுவார் இப்படியே மூன்று முறை அள்ளிப்போடுவார். அதன் பிறகு இறந்தவரின் மனைவியை அருகில் கூட்டிவந்து வாய்க்கரிசி போடச் செய்வார்கள். மறுபடி இறந்தவரின் மற்ற பையன்கள், அவருடைய பெண் மக்கள், மற்றும் பங்காளிகள், மாமன் மைத்துனர்கள் எல்லோருமே பிணத்தின் வாயில் அரிசி போடுவார்கள். பிறகு, இறந்தவரின் உடலில் ஏதாவது தங்கம், வெள்ளி நகைகள் ஏதாவது இருந்தால் கழட்டி எடுத்துக்-கொண்டு அவருடைய இடுப்பில் இருக்கும் அரணக்கயிறையும் அறுத்து எடுத்துக் கொள்வார்கள். ஆனால், இறந்தவரின் பூநூலை எடுக்க மாட்டார்கள்.

பிறகு, இறந்து போனவரின் மகன் பிணத்திற்கு மேல்புறம் நின்று கிழக்கு முகமாக நின்று கொல்லிச்சட்டியில் வைத்த சந்தனக் கட்டையை நெருப்புடன் எடுத்து பிணத்தின் நெஞ்சின் மேல் வைப்பார் மூத்தமகன். பிறகு, கிண்ணத்தில் இருக்கும் நெய்யை மாந்தழையில் எடுத்து சந்தனக்கட்டை நெருப்பின் மேல் விடுவார் அப்போது புரோகிதர் மந்திரம் சொல்லுவார். சந்தனக்கட்டையில் இருக்கும் நெருப்பு நன்றாகப் பிடித்து எரிய ஆரம்பித்து மற்ற கட்டைகளிலும் நெருப்பு பிடிக்கும். பிறகு, ஒரு மண் கும்பத்தில் நிறைய தண்ணீர் எடுத்து அதை கொல்லிவைத்த மூத்த மகனின் தோளில் வைப்பார்கள். அப்போது அவர் பிணத்தின் தலை மேட்டில் நிற்பார் கும்பத்தை தோளில் வைத்ததும் அப்படியே பிணத்தை வலப்பக்கமாக ஒரு சுத்து வந்து மறுபடியும் தலை மேட்டில் நிற்பார். அப்போது புரோகிதர் கையில் ஒரு இரும்பு, அல்லது ஒரு கல்லு ஏதோ ஒன்றில் கும்பத்தை ஒரு ஓட்டை செய்து விடுவார். அப்போது கும்பத்தில் இருக்கும் தண்ணீர் லேசாக ஒழுகும். மறுபடியும் பிணத்தை ஒரு சுத்து வந்து தலைமேட்டில் நிற்பார். புரோகிதர் மறுபடியும் கும்பத்-தை ஒரு ஓட்டை செய்வார். மறுபடியும் ஒரு சுத்த வந்து தலைமேட்டில் நிற்பார். புரோகிதர் அப்பவும் ஒரு ஓட்டை செய்வார். மறுபடியும் பிணத்தை ஒரு சுத்து வந்து பிணத்தின் தலை மேட்டில் பிணத்தை பார்க்காமல் தெற்கு முகமாக நின்று தோளில் இருக்கும் கும்பத்தை அப்படியே கீழே போட்டு விடுவார்கள். கும்பம் உடைந்து விடும். பிறகு, கொல்லி வைத்தவர் கீழே உடைந்து கிடக்கும் ஒரு ஓட்டை எடுத்து அதில் கொஞ்சம் தண்ணீர் எடுத்து பிணத்தின் வாயில் ஊத்துவார். பிறகு, மறுபடியும் சில கட்டைகளை வைத்து நன்றாக எரித்து விடுவார்கள்.

பிறகு அங்கு வேறு யாரோ இரண்டு பேரை நிறுத்தி நெருப்பை நன்றாக எரித்து விடும்படி சொல்லிவிட்டு ஐயர்கள், ஆண்கள், பெண்கள் எல்லோரும் கிணற்றுக்குச் சென்று குளித்து விட்டு வீட்டுக்கு வந்து சேருவார்கள்.

## காடாத்துவது

இறந்தவரின் பங்காளியின் மனைவிகள் அவருடைய மகள்கள் எல்லோரும் குளித்து விட்டு ஒரு தட்டத்தில் அரிசி மாவில் உப்பும் போடாமல் ~~உப்~~ 9 தோசை சுட்டு தட்டத்தில் வைப்பார்கள். பிறகு அத்துடன் தேங்காய், பழம், வெற்றிலை, பாக்கு எல்லாம் வைத்துவிடுவார்கள். பிறகு இறந்தவரின் மனைவிக்கு புதிய பட்டு சேலை கட்டி, தலை சீவி, பொட்டு வைத்து தலையில் பூ வைத்து, கண்ணிற்கு மையிட்டு அந்தப் பெண்ணை வீட்டின் முன் வாசலில் உட்கார வைத்து பெண்கள் எல்லோரும் சேர்ந்து கட்டி அழுவார்கள். பிறகு ஆண்கள் மூன்று பேர் மூன்று குடம் எடுத்துக்கொள்வார்கள். கொள்ளி வைத்த மகன் சொம்பு தண்ணீரை கையால் எடுத்துக்கொள்வார். தட்டத்தில் வைத்த சாமான்களை யாரோ ஒருவர் கையால் தட்டத்துடன் எடுத்துக்கொண்டு சங்கு, சேகண்டி, மற்றும் இசை வாத்தியங்களுடன் கொள்ளி வைத்த மகன், புரோகிதர், ஆண்கள் எல்லோரும் மயானத்தை நோக்கி முன்னால் செல்வார்கள். அவர்கள் இறந்து போனவரின் மனைவியை கூட்டிக்கொண்டு பெண்கள் எல்லோரும் மயானம் போய்ச் சேர்ந்ததும் பின்னால் செல்வார்கள்.

(குறிப்பு:- இறந்து போனவரின் மனைவியை அலங்காரம் செய்து நடு வாசலில் உட்கார வைத்து அழும்போது அவள் அருகில் இறந்து போனவரின் வேஷ்டி, துண்டு, அவர் உபயோகித்த விபூதிப்பை, பொடி டப்பி இவைகளையும், முன்பு கோடி போட்ட போது அந்தத் துணியால் கிழித்த ஒரு முழம் துணியை சொம்பின் விளிம்பில் 

← இந்த மாதிரி கட்டி வைத்து தட்டத்தில் இருக்கும் சாமான்களையும், கோடியால் கிழித்த துணிகளையும் எடுத்து நடுவாசலில் அந்தப் பெண்ணின் அருகில் வைத்து விட்டுத்தான் இறந்து போனவரின் மனைவியுடன், சாமான்களையும் மற்ற பெண்கள் சுற்றி வந்து மாரடித்து அழுவார்கள். பிறகுதான் சாமான்களையும் எடுத்துக்கொண்டு அந்தப் பெண்ணையும் கூட்டிக் கொண்டு மேற்சொன்னபடி மயானத்திற்கு போவார்கள்.)

மயானத்திற்கு சென்றதும் சாமான்களையெல்லாம் வைத்து விட்டு பிணத்தை தகனம் செய்த இடத்திற்கு அருகில் ஒரு வாழை இலை போட்டு


அதில் பச்சரிசி போட்டு அதன் மேல் ஒரு மண்சொம்பில் தண்ணீர்
வைத்து, அதன் மேல் மாந்தழை, தேங்காய் இவைகள் எல்லாம் வைத்து இலை
யில் மஞ்சள் பிள்ளையார் பிடித்து வைத்து புரோகிதர் மந்திரம் சொல்ல கொள்ளி
வைத்த மகன் புண்ணியார்ச்சனை செய்த பிறகு, அந்த தண்ணீரை எடுத்து
பிணத்தை தகனம் செய்த இடத்தில் தெளிப்பார்கள். பிறகு அதே இடத்தி
-ல் எருமுட்டை போட்டு அதில் நெய் ஊற்றி ஓமம் வளர்த்துவார் கொள்ளி
வைத்தவர். புரோகிதர் மந்திரம் சொல்லுவார் பிறகு சில நபர்கள்
மூன்று குடங்களையும் எடுத்துக் கொண்டு கிணற்றுக்குச் சென்று
தண்ணீர் கொண்டு வருவார்கள். அந்த தண்ணீரைக் கொண்டு வந்ததும்
அந்த தண்ணீரில் ஒருகுடம் தண்ணீரை கொள்ளிவைத்தவர் வாங்கி
பிணம் எரிந்து கிடக்கும் சாம்பலின் மேல் ஊற்றுவார். மற்ற இர
ண்டுகுடம் தண்ணீரையும் பங்காளிகள் அந்த தகனம் செய்த
இடத்தில் ஊற்றுவார்கள். அந்த இடத்தில் சூடு ஆறவிட்டால் மறு
படியும் தண்ணீர் கொண்டுவந்து ஊற்றி நன்றாக ஆறிய
பின்பு, ஒரு இரும்பு மோதிரத்தில் கம்பிக் கயிற்றால் ஒரு
தண்டங் கத்திரிக்காயை கட்டி மோதிரத்துடன் சேர்த்துக்
கட்டி அந்த மோதிரத்தை அந்தக் கொள்ளிவைத்தவரின் வல
-து கை மோதிர விரலில் போட்டுக்கொண்டு ஒரு மண்சொம்
-பை எடுத்துத் தகனம் செய்த இடத்தில் வைத்து அதில்
எரிந்து போன பிணத்தின் சிரசு எலும்பு ஒன்று, நெஞ்சின்
எலும்பு ஒன்று, வயிற்றின் தொப்பில் எலும்பு ஒன்று, இரண்டு
கையிலும் விரல் எலும்பு இரண்டு இரு முழங்கால் எலும்பு,
கால் பாதத்தின் எலும்பு இரண்டு இவைகள் எல்லாம் எடுத்து
மண்சொம்பில் போடுவார். அந்த சொம்பை அதே இடத்தில்
~~[illegible]~~ ஒரு பக்கம் வைத்து விட்டு அங்கு
மீதி கிடக்கும் எலும்பு, சாம்பல் இவைகளையெல்லாம் சேர்த்து
தகனம் செய்த இடத்தில் உருவம் போல செய்வார்கள்
அது:- பிணத்தை தகனம் செய்வதற்கு எந்த மாதிரி தெற்கு
தலையும், வடக்கு காலும் வைத்து படுக்க வைத்தார்களோ
அதே மாதிரி உருவம் செய்வார்கள் பிறகு இறந்து போனவரின்
மூத்த மகன் (கொள்ளிவைத்தவர்) அந்த உருவத்திற்கு சந்த
-னம், குங்குமம் இவைகளால் பொட்டு வைப்பார். பிறகு அந்த உரு
வத்தின் கால் பக்கம் தேங்காய், பழம் இவைகள் எல்லாம் உடைத்து
வைத்து விட்டு தட்டத்தில் இருக்கும் உப்பு போடாத தோசை
-யை எடுத்து உருவத்தின் தலைமேல் ஒரு தோசையும், இரண்
-டு கைகளின் மேல் இரண்டும், நெஞ்சில் ஒன்றும் வயிற்றின் மேல்
ஒன்றும் இரண்டு முழங்காலின் மேல் இரண்டும் இரண்டு
பாதத்தின்

மேல் இரண்டும் வைப்பார். பிறகு புரோகிதர் மந்திரம் சொல்லுவார் கொள்ளி
வைத்தவர் ஒரு தட்டத்தில் சூடம் பொருத்தி உருவத்திற்கு ஆரதை
செய்வார். பிறகு கொள்ளி வைத்தவர் அங்கு டம்ளரில் வைத்துள்ள
பசுவின் பாலையெடுத்து கொஞ்சம் கையால் ஊற்றி அதையும்
அந்த உருவத்தின் மேல் தெளித்து விடுவார். பிறகு இதே போல் இறந்தவர்
மனைவியும் உருவத்தின் மேல் பாலும், தண்ணீர் ஊற்றுவார். பிறகு இறந்தவரின்
மற்ற மகன்கள் மருமகள்கள் எல்லாம் பால் தண்ணீர் உருவத்தின் மேல்
ஊற்றுவார்கள் பிறகு உறவினர்களும், கூட்டப்பட்டவர்களும் பால்
தண்ணீர் உருவத்தின் மேல் ஊற்றுவார்கள். பிறகு ஒரு மண்கும்
பத்தில் தண்ணீர் நிறைய ஊற்றி அதை உருவத்தின் மேல் தலை
மேட்டில் மூன்று கல் வைத்து அடுப்பு கூட்டி அதன் மேல் வைத்து
கும்பத்தில் ஒரு ஓட்டையும் செய்து விடுவார்கள். பிறகு, சொம்பி
-ல் போட்டு வைத்திருக்கும் சாம்பலுக்குள் கொஞ்சம் பால் ஊற்றி
அத்துடன் கொஞ்சம் தண்ணீர் ஊற்றி சுத்தம் செய்து தண்ணீரை
கீழே வைத்து விட்டு அந்தச் சொம்பின் மேல் விளிம்பிறகு, மண்ணில்
அளவாகச் செய்து மூடி போட்டு மயானத்தில் ஒரு குழி தோண்டி அந்த
-க்குழிக்குள் சொம்பை வைத்து அதன் மேல் மண்ணைப் போட்டு
மூடிவிட்டு அதன் மேல் அடையாளமாக ஒரு கல்லை வைத்து விடு
வார்கள். இவைகளையெல்லாம் செய்வது இறந்து போனவரின்
மூத்தவர் மகனை கொள்ளிவைத்தவர்தான். பிறகு எல்லோரும் கிணற்றுக்
கு வந்து அப்போது மாமன் மைத்துனர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள்
என்று கணக்குப் போட்டு ஆளொன்றுக்கு ஐந்தணா வீதம் கணக்கும்
போட்டு பணம் சேர்த்து அந்தப் பணத்தையெல்லாம் கொள்ளி வைத்த
வரின் கையில் கொடுப்பார்கள். அந்தப் பணத்தையெல்லாம் அவர்
வலது கையால் வைத்துக்கொண்டு, அதன் மேல் கொஞ்சம் எள்
போட்டு அதன் மேல் கொம்பிலுக்கும் தண்ணீரை மூன்று முறை
ஊற்றி பிறகு கோடித்துணியாக கிழித்த ஒரு முழத்துணியை
கீழே விரித்துப் போட்டு அந்தத்துணியின் மேல் கையிலிருக்கும் பணத்
தை கையில் எடுத்து அங்குள்ள பங்காளி ஒருவர் கையால்
கொடுத்து விடுவார். அதை அவர் வாங்கி முதலில் புரோகிதருக்கு
5 அணா கொடுப்பார். அதன் பிறகு அங்குள்ள மாமன் மைத்
துனர்கள் எல்லோருக்கும் ஆளுக்கு 5 அணா வீதம் கொடுத்
து விடுவார். பிறகு எல்லோரும் குளித்துக் கொண்டு
வீடு வந்து சேருவார்கள்.

## நித்திய கர்ம விதி

எல்லோரும் வீடு வந்து சேர்ந்ததும் வீட்டில் பிணத்தை போட்டிருந்த இடத்தில் மணல் ஒரு கூடை கொண்டு வந்து போட்டு மணலை பரப்பிவிட்டு அதன் மத்தியில் மூன்று சிறிய கல் சாமி நட்டு வைப்பார்கள். பிறகு கொள்ளிவைத்தவர் கிணற்றுக்குச் சென்று ஒரு குடம் தண்ணீர் கொண்டுவந்து ஒரு சித்த பாத்திரத்தில் அரைப்படி பச்சரிசி போட்டு பொங்கல் வைப்பார். பிறகு ஒரு பச்சை தென்னை மட்டையால் ஓத்தை தடுக்கு ஒன்று செய்து அந்த மூன்று சாமிக்கு ஒரு பக்கம் வழி விட்டு மற்ற மூன்று பக்கமும் அந்த ஓத்தை தடுக்கால் திரை போல் மறைத்து கட்டி விடுவார்கள். பிறகு அந்த சாமியின் முன்பு ஒரு வாழை இலை போட்டு அந்தப் பாத்திரத்தில் சமைத்த சாதத்தை எல்லாம் மீதியில்லாமல் இலையில் எடுத்துப் போடுவார். பிறகு கோடித்துணி யில் கிழித்த துணியை இலையின் பக்கம் விரித்துப் போட்டு விட்டு இலையில் இருக்கும் சாதத்தை 4 உருண்டையாக ச்செய்வார். அதில் இரண்டு பெரிய உருண்டை மற்ற இரண்டு உருண்டைகளும் அதை விடச் சிறியதாக இருக்கும். பிறகு பெரிய உருண்டை சாதம் ஒன்றும், சிறிய உருண்டை சாதம் ஒன்று எடுத்து "இது காவு சாப்பாட்டுக்கு" என்று சொல்லிக் கொண்டே விரித்துப் போட்ட துணியின் மேல் இரண்டு உருண்டை களையும் வைப்பார். பிறகு, பெரிய உருண்டை ஒன்றும் சிறிய உருண்டை ஒன்றையும் எடுத்து "இது மாவுச் சாப்பாட்டுக்கு" என்று சொல்லிக்கொண்டே துணியின் மற்றொரு பக்கம் வைப்பார். இப்போது புரோகிதர் மந்திரம் சொல்லிக்கொண்டே இருப்பார்.

மேற்கண்ட முறைகளை செய்வதெல்லாம் கொள்ளிவைத்தவர்தான். சாதம் எடுத்து வைத்து முடிந்ததும் ஒரு தட்டத்தில் சூடம் பொருத்தி தீபாராதனை செய்து சாமி கும்பிடுவார்கள் எல்லோரும். பிறகு, துணி மேல் இருக்கும் சாதத்தை எடுத்து வாழை இலை மேல் வைத்து விட்டு அந்தத் துணியை கொள்ளி வைத்தவர் எடுத்து துண்டின் (துணியின்) இரண்டு முனையையும் இரண்டு கையால் பிடித்து இடது வலது கையால் பிடித்திருக்கும் துணியுடன் கொஞ்சம் [illegible] சேர்த்து கையால் பிடித்து அந்தக் கையை எடுத்து தண்ணீரை நட்டு வைத்திருக்கும் கல்சாமியின் மீது மந்திரம் சொல்லிக் கொண்டே தண்ணீர் விடுவார். இப்படியே சொம்புக்குள் கையை விட்டு நினைத்து நட்டிருக்கும் மூன்று சாமிக்கும் ஒவ்வொரு சாமிக்கும் ஏழுமுறை தண்ணீர் விடுவார் மூன்று சாமிக்கும் 21 முறை தண்ணீர் விடுவார்.



படத்தில் NO1 கொள்ளிவைத்தவரின் வலது கை, இந்த தக்கையால்தான் துணியுடன் எல்லாம் சேர்த்துப் பிடித்து சொம்பின் தண்ணீரை விட்டு அப்படியே எடுத்து கல்சாமி மேல் விடுவது ~~தண்ணீரை~~

NO.3 கோடியால் கிழித்த துணி. NO.2 கொள்ளிவைத்தவரின் இடது கை

இந்த மாதிரி தண்ணீர் விடும்போது அவர் தகப்பனாரின் பெயர் கோத்
திரம் இவைகளை சொல்லிக்கொண்டே விடுவார் பிறகு கையிலிரு
க்கும் துணியை கீழே விரித்து சாத உருண்டை 4ம் எடுத்து
அந்தத் துணியில் வைத்துத் துணியை மூட்டை போல் சுருட்டிக்
கையால் எடுத்துக்கொண்டு கிணற்றுக்குச் செல்வார் கொள்ளி
வைத்தவர். அவருடன் 4 புரோகிதரும், உறவினர்களும், சங்கு
சேகண்டி வாத்தியங்களும் செல்லும். கிணற்றருகில் சென்றதும்
அங்குள்ள ஒரு மரமோ அல்லது ஒரு செடியோ ஏதாவது ஒன்றின்
அருகில் சுமார் 1 அடி சதுரத்திற்கு சிறிய குழி ஒன்று தோண்டி
அந்தக் குழிக்குள் வீட்டில் வைத்தது போலவே மூன்று சிறிய கல்சாமி
நட்டுவைப்பார் கொள்ளிவைத்தவர். இந்த சாமிகளை தெற்குமுகமாக
அல்லது கிழக்குமுகமாக நடுவார்கள். இந்த இரண்டு திசையில்
வீட்டில் எந்த திசையாக சாமியை வைத்தார்களோ அதே போல்
கிணற்றருகில் நடுவார்கள். அந்த சாமிக்கு சந்தனப் பொட்டு வைத்து
விட்டு அந்த சாமிமுன் ஒரு வாழை இலை போட்டு துணியில் இருக்கும்
சாத உருண்டைகளை இலையில் எடுத்து வைத்து விட்டு பிறகு, துணியை
சாமிமுன் கீழே விரித்துப் போட்டு வீட்டில் செய்தது போலவே பெரிய
உருண்டை சாதம் ஒன்றும், சிறிய உருண்டை சாதம் ஒன்றும்
எடுத்து "இது காகச்சாப்பாடு" என்று சொல்லிக் கொண்டே
விரித்துப் போட்ட துணியின் மேல் வைப்பார். மறுபடி இரண்டு உருண்
டை சாதத்தையெடுத்து "இது மாடுசாப்பாடு" என்று சொல்லி
க்கொண்டே துணியின் மேல் வைப்பார் கொள்ளிவைத்தவர். பிறகு
அந்த சாத உருண்டையை எடுத்து இலைமேல் வைத்து விட்டு அந்தத்
துணியை எடுத்துத் துணியின் இரண்டு முனையையும் இரண்டு
கையில் பிடித்து வலது கையில் பிடித்திருக்கும் துணியுடன் கொஞ்சம்
எள்ளும் சேர்த்து பிடித்து சொம்புத்தண்ணிக்குள் கையை விட்டு
எடுத்து, எடுத்து தகப்பனாரின் பெயரையும், கோத்திரத்தையும்
சொல்லிக்கொண்டே மூன்று சாமிகளின் மேலும் 3 முறை தண்ணீர்
விடுவார் கொள்ளிவைத்தவர். பிறகு, கொள்ளிவைத்தவரின் வலது
கையில் 10 அணா வைத்து அதன் மேல் கொஞ்சம் எள்ளு வைத்து
தண்ணீர் ஊற்றுவார்கள் அப்போது 4 புரோகிதர் மந்திரம்
சொல்லுவார். பிறகு அந்தப் பத்து அணாவையும் "என் தகப்பனார்
மோக்ஷமடைய வேண்டும்" என்று சொல்லிக்கொண்டு புரோ
கிதரின் கையில் கொடுத்து விடுவார். கொள்ளிவைத்தவர்
பிறகு அந்த சாதம் 4 உருண்டையும் எடுத்து கிணற்
றுக்குள் போட்டுவிட்டு கொள்ளிவைத்தவர் கிணற்றில் குளித்து
விட்டு கிணற்றருகில் வைத்த-

மூன்று சாமியையும் ஏதாவது ஒரு ஓலையை வைத்து பத்திரமாக மூடி வைத்து விட்டு எல்லோரும் வீட்டுக்கு வருவார்கள். வீட்டுக்கு வந்ததும் எல்லோரும் சாப்பிடுவார்கள். பிறகு, புரோகிதர் விடை பெற்றுக்கொண்டு அவரின் ஊருக்குச்சென்று விடுவார். அவர் போனபின்பு இறந்த வீட்டிற்கு சொந்தக்காரர்கள், தூரத்து உறவினர்களுக்கு இறந்த செய்தி தெரியாதவர்களுக்கெல்லாம் கடிதம் எழுதுவார்கள். கடிதத்தில் கருமாதிச்சீர் எப்பொழுது நடைபெறும் என்பதையும் குறிப்பிடுவார்கள்.

3 வது நாள் பிறகு மறுநாள் காலையிலும் இறந்து போனவரின் மனைவிக்கு புதிய புடவை கட்டி (சிகப்புப்பட்டுப்புடவை) தலைசீவி தலைக்குப் பூவைத்து. பொட்டு வைத்து கண்களுக்கு மையிட்டு வீட்டின் முன்பு நடுவாசலில் உட்கார வைத்து பெண்கள் எல்லோரும் சேர்ந்து கட்டி அழுவார்கள், பிறகு 2 வது நாள் செய்தது போலவே கொள்ளிவைத்தவர் கிணற்றுக்குச் சென்று தண்ணீர் கொண்டு வந்து $\frac{1}{2}$ படி அரிசி போட்டு பொங்கல் வைத்து நாலு உருண்டை பிடித்து வீட்டு சாமிக்கு வைத்து பூஜை செய்து பிறகு 2 வது நாள் செய்தது போலவே கோடியால் கிழித்த துண்டை கையால் பிடித்து வலது கையால் பிடித்திருக்கும் துணியுடன் கொஞ்சம் எள் சேர்த்து சொம்புத்தண்ணீரில் கையை விட்டு மூன்று சாமிக்கும் 3 முறை தண்ணீர்விடுவார். இது போல் அந்த சாதத்தை கிணத்துக்கு எடுத்துச்சென்று அங்குள்ள மூன்று சாமிக்கும் சாத உருண்டையை வைத்து பூஜை செய்து 3 முறை தண்ணீர் விட்டு சாதத்தை கிண-ற்றில் போட்டுவிட்டு கொள்ளிவைத்தவர் குளித்து விட்டு வீட்டுக்கு வருவார். ஆனால், இரண்டாவது நாள் இந்தமாதிரி செய்யும் போது புரோகிதருக்கு 10 அணா கொடுத்தது போல் தினமும் கொடுக்கமாட்டார்கள். மற்றபடி இரண்டாவது நாள் நடந்தது போலவே எல்லாம் நடக்கும்.

இது மாதிரி இறந்து 7 வது நாள் முடியும் வரை மேற்கண்டது போல் இறந்தவரின் மனைவிக்குதினமும் காலையில் பட்டுச்சேலை கட்டி தலை சீவி பூவைத்து, நெற்றிக்கு பொட்டு வைத்து நடுவாசலில் உட்கார வைத்து பெண்கள் எல்லோரும் சேர்ந்து கட்டி அழுவதும் கொள்ளிவைத்தவர் கிணற்றுக்குச் சென்று ஒருகுடம் தண்ணீர் கொண்டு வந்து $\frac{1}{2}$ படி அரிசி போட்டு பொங்கல் வைத்து வீட்டில் நட்டுவைத்து மூன்று சாமிகளுக்கும் பிறகு கிணற்றில் இருக்கும் மூன்று சாமிகளுக்கும் பூஜை செய்து எள்ளும் தண்ணீரும் விட்டு சாதத்தை கிணற்றில் போடுவதும் 7 வது நாள் முடியும் வரை தினமும் செய்ய வேண்டும். பிறகு 7 வது நாள் இரவு இறந்து போனவருடைய மனைவியின் பிறந்தவனுடைய தன்னுடைய

வீடு எங்கு இருந்தாலும் அங்கு இறந்து போனவருடைய மனைவியை கூட்டிச் சென்று பிறந்தவருக்கு (இறந்தவரின் மனைவிக்கு) பாலும் சோறும் போட்டு சாப்பிட்ட பின்பு திரும்பவும் பிறந்த ஊரா அப்போதே கூட்டி வந்து இறந்த வீட்டில் விட்டு விடுவார்

10 வது நாள்:-

10 வது நாள் உறவினர்கள் எல்லோரும் வந்து சேருவார்கள். அன்று புரோகிதரும் வந்து விடுவார். அன்று இறந்தவருடைய மகன்களும், பங்காளியின் பெண்களும் எல்லோரும் சேர்ந்து இறந்து போனவர் என்ன பலகாரம் இஷ்டமாக சாப்பிடுவாரோ அந்தப் பலகாரங்கள் எல்லாம் செய்வார்கள் அப்போது பங்காளி ஒருவர் கிணற்றுக்குச் சென்று குளித்து விட்டு ஒரு குடம் தண்ணீர் கொண்டு வந்து ஒரு பாத்திரத்தில் அரிசி 1 படி (பச்சரிசி) போட்டு அத்துடன் ஒரு வாழைக்காய் சிறிது சிறிதாக அறுத்துப் போட்டு தண்ணீர் ஊற்றி அதை அடுப்பில் வைத்துச் சமைப்பார். அந்த சாதத்தை பாத்திரத்துடன் கொண்டு வந்து வீட்டில் நட்டு வைத்திருக்கும் சாமிகளின் முன்பு வைத்து விடுவார் பிறகு, இறந்தவரின் உடன் பங்காளிகள் எல்லோரும் (இறந்தவரின் வயதுக்கு சிறியவர்கள் மட்டும்) தலையில் இருக்கும் குடுமை மயிர், கண் தாடு, கண் புருவம் இவைகளில் இருக்கும் மயிர்களைத் தவிர மற்றபடி உடம்பில் இருக்கும் மயிர்களை எல்லாம் நாவிதனிடம் சவரம் செய்து கொள்வார்கள் பிறகு இவர்கள் எல்லோரும் கிணற்றுக்குச் சென்று குளித்துக் கொண்டு வந்து முன்பு, இறந்தவரின் மகன், அங்கு நட்டு வைத்திருக்கும் மூன்று சாமிகளுக்கும் ~~எள்ளும் தண்ணீரும்~~ 21 முறை தண்ணீர் ஊற்றியது போலவே குளித்து விட்டு வந்த பங்காளிகள் எல்லோரும் வரிசையாக, ஒவ்வொருவராக அந்த சாமிகளுக்கு எள்ளும் தண்ணீர் 21 முறை ஊற்றுவார்கள் பிறகு இதே போல் கிணற்றடிக்குச் சென்று அங்கு நட்டு வைத்திருக்கும் மூன்று சாமிகளுக்கும் பங்காளிகள் அனைவருமல் 21 முறை எள்ளும் தண்ணீரும் ஊற்றி விட்டு வீட்டுக்கு வருவார்கள்.

பிறகு வீட்டில் இருக்கும் சாமியின் முன்பு ஒரு வாழையிலை போட்ட பின்பு இறந்து போனவரின் மகன் அங்கு வந்து அந்த சாமிகளின் முன்பு நின்று தலையை விரித்துப் போட்டு அழுது கொண்டே பாத்திரத்தில் இருக்கும் சாதத்தை மீதியில்லாமல் எடுத்து வாழை இலையில் வைப்பான் பிறகு செய்து வைத்த பலகாரங்கள் எல்லாம் எடுத்து வந்து அந்த இலையில் வைத்து விட்டு

பிறகு அந்த சாமியின் முன்பு வெற்றிலை பாக்கு வைத்து அதில் 4 அணா காணிக்கை வைப்பார்கள். பிறகு தேங்காய், பழம் 2 உடைத்து வைத்து இறந்து போனவருடைய விபூதிப்பை, வேஷ்டி, துண்டு, மூக்குப் பொடி டப்பி ஆகியவைகள் எல்லாம் அந்த சாமிகளின் முன்பு கொண்டு வந்து வைப்பார்கள். பிறகு கொள்ளிவைத்தவர் வந்து கோடியில் கிழித்த துணியை எடுத்து இரண்டு கைகளிலும் பிடித்து வலது கையில் பிடித்து இருக்கும் துணியுடன் கொஞ்சம் எள் சேர்த்துப் பிடித்து முன்பு விட்டது போல் மூன்று சாமிகளின் மேல் 3 முறை எள்ளும் தண்ணீர் விடுவார். தண்ணீர் விடும் போது தகப்பனார் பெயர் கோத்திரம் இவைகளை சொல்லிக்கொண்டே தண்ணீர் விடுவார் பிறகு தட்டத்தில் சூடம் பொருத்தி பூஜை செய்வார்.

பிறகு ஒரு வாழை இலையில் ஒரு படி பச்சரிசி போட்டு காய்கறி பாசிப்பயறு, வாழைக்காய் இவைகள் எல்லாம் வைத்து அதன் மேல் கொள்ளிவைத்தவர் சொம்பில் இருக்கும் தண்ணீரை கொஞ்சம் ஊற்றி பிறகு அந்த அரிசியை வாழை இலையுடன் எடுத்து "என் தகப்பனார் நல்ல மோக்ஷமடைய வேண்டும்," என்று சொல்லிக் கொண்டு புரோகிதரிடம் கொடுப்பார். புரோகிதர் அதை வாங்கிக்கொண்டே கொள்ளிவைத்தவரின் கையில் எள் கொடுப்பார். அதை அவர் வாங்கி மந்திரத்தின் மூலம் "நீங்கள் மோக்ஷ லோகம் போய்ச் சேருங்கள்" என்று சொல்லிக்கொண்டே கையிலிருக்கும் எள்ளை மூன்று சாமிகளின் மேல் போடுவார் பிறகு, கோடித்துணியில் கிழித்த துணியை எரித்துப் போட்டு விட்டு நட்டுவைத்திருக்கும் மூன்று சாமிகளையும் "சிவசிவா" என்று சொல்லிக்கொண்டே பிடுங்கி அந்தத் துணியில் வைப்பார் கொள்ளிவைத்தவர். பிறகு அந்த சாமிகளுடன் 4 உருண்டை சாதமும் வைத்து மூட்டையாக கட்டி வைப்பார்கள் பிறகு, ஒரு வேஷ்டியில் சாமி முன்பு வைத்திருந்த தேங்காய், பழம், பலகாரங்கள் இவைகளையெல்லாம் வைத்து அதையும் ஒரு மூட்டையாகக்கட்டி இவைகளையெல்லாம் கொண்டு வந்து நடுவாசலில் போட்டிருக்கும் கோலத்தின் நடுவில் வைப்பார்கள் இத்துடன் இறந்து போனவரின் வேஷ்டி, துண்டு, விபூதிப்பை, பொடி டப்பி, சொம்பில் இருக்கும் தண்ணீரையும் கொண்டு வந்து நடுவாசலில் வைப்பார்கள்.

இதற்குள் பெண்கள் இவர்கள் சேர்ந்து இறந்து போனவருடைய மனைவிக்கு பட்டு சேலை கட்டி, தலை நிறைய பூவைத்து நெற்றியில் பொட்டு வைத்து கண்களுக்கு மையிட்டு தயாராக வைத்திருப்பார்கள். மேலே சொன்ன சாமான்களை யெல்லாம் நடுவாசலில் கொண்டு வைத்த பின்பு

இறந்து போனவருடைய மனைவியையும் கூட்டி வந்து அந்த சாமானங்கள் இருக்கும் நடுவாசலில் தெற்கு முகமாக உட்கார வைத்து பெண்கள் எல்லோரும் சேர்ந்து இறந்து போனவரின் மனைவியையும் அவருடன் வைத்திருக்கும் சாமானங்களையும் மூன்று முறை சுற்றி அழுது கொண்டு மாரடித்துக்கொண்டு வருவார்கள் பிறகு இறந்து போனவரின் மனைவியையும் கட்டிக் கொண்டு அழுவார்கள் பிறகு பெண்கள் எல்லோரும் விலகிக் கொண்ட பின்பு இறந்து போனவரின் மகள் புருஷன் (மருமகன்) ஒரு புதிய சிகப்புச் சேலையைக் கொண்டு வந்து இறந்தவரின் மனைவி மேல் முக்காடு போட்டு விட்டு அழுவார், பிறகு இறந்தப் பெண்ணின் அக்காள், தங்கைகள் எத்தனை பேர் இருந்தாலும் அவர்கள் எல்லோரும் ஆளுக்கொரு புதிய சிகப்புச் சேலை கொண்டு வந்து இந்தப் பெண்ணின் தலையில் முக்காடு போட்டு விட்டு கட்டி அழுவார்கள்.

பிறகு கொள்ளிவைத்தவர், புரோகிதர், உறவினர்கள் இவர்கள் எல்லோரும் வாசலில் இருக்கும் சாமானங்களையெல்லாம் எடுத்துக் கொண்டு அத்துடன் சாமிக்கு மறைத்துக் கட்டியிருந்த ஒத்தை தென்னை ஓலைத்தடுக்கையும் எடுத்துக்கொண்டு சங்கு சேகண்டி வாத்தியத்துடன் எல்லோரும் கிணற்றுக்குப் புறப்படுவார்கள். இவர்களுக்குப் பின்னால், இறந்து போனவருடைய மனைவியையும் இரண்டு பெண்கள் இரண்டு பக்கம் பிடித்து கிணற்றுக்கு கூட்டிச்செல்வார்கள். இவர்களுடன் மற்ற பெண்களும் கிணற்றுக்குச் செல்வார்கள். அங்கு சென்றதும் கிணற்றருகில் நட்டு வைத்த மூன்று சாமிகளுக்கும் முன் போய் [illegible] முறை எள்ளும் தண்ணீரும் விட்டு பிறகு "சிவ சிவா" என்று சொல்லிக் கொண்டே அந்த சாமிகளையும் பிடுங்கி மூட்டைக்குள் வைத்துக் கட்டுவார் கொள்ளிவைத்தவர் பிறகு கொள்ளி வைத்தவர் சாமிகள் இருக்கும் மூட்டையை எடுத்துக்கொண்டு கிணற்றுக்குள் செல்வார் இவருடன் சில ஐயர்கள் கிணற்றுக்குள் செல்வார்கள் கிணற்றுக்குள் சென்றதும் மூட்டையை அவிழ்த்து அதில் இருக்கும் சாமிகளையும், சாத உருண்டை 4யும் கிணற்றில் போட்டு விட்டு கொள்ளிவைத்தவர் குளித்துக்கொள்வார். பிறகு ஈரவேஷ்டியுடன் அப்படியே மேலே வந்து அங்குள்ள புரோகிதர், மாமன், மைத்துனர்கள், இவர்களையெல்லாம் மூன்று முறை சுற்றி வருவார் கொள்ளி வைத்தவர்.


அங்குள்ள மாமன் மைத்துனர்கள் எத்தனை பேர் இருக்கிறார்கள் என்று.

கணக்குப்பார்த்து அவருடன் புரோகிதரையும் சேர்த்துக் கணக்குப்பார்த்து அவர்களுக்கெல்லாம் ஆளுக்கு 5 அணா கொடுக்கும் அளவுக்கு பணம் எடுத்து கொள்ளிவைத்தவரின் கையில் கொடுத்து அவர் அந்தப் பணத்தின் மேல் கொஞ்சம் எள்ளுப்போட்டு அதன் மேல் கொஞ்சம் தண்ணீர் ஊற்றி அந்தப் பணத்தை கோடித்துணியில் கிழித்த துணிமேல் போட்டு மறுபடியும் அந்தப்பணத்தை கையாலெடுத்து ஒரு பங்காளியின் கையால் கொடுப்பார் கொள்ளிவைத்தவர் பங்காளி ஒருவர் அந்தப் பணத்தை வாங்கி புரோகிதருக்கு 5 அணா கொடுத்து விட்டு அங்குள்ள மாமன், மைத்துனர்கள் எல்லோருக்கும் ஆள் ஒன்றுக்கு 5 அணா வீதம் கொடுத்துவிடுவார். பிறகு, அந்த கோடியால் கிழித்த துணியை கிணற்றுக்குள் போட்டு விடுவார்கள். பலகாரங்கள் தேங்காய், பழம் இவைகள் இருக்கும் தட்டையை அப்படியே நாவிதனுக்கு கொடுத்து விடுவார்கள். பிறகு கிணற்றுப்பக்கம் ஒதுக்கத்தில் புரோகிதரும், கொள்ளிவைத்தவரும் உட்கார்ந்து புரோகிதர் மந்திரம் சொல்லவும் கொள்ளிவைத்தவர் புண்ணியாச்சனை செய்வார். பிறகு, நெய் விட்டு ஓமம் வளர்த்துவார்கள் அந்த ஓமத்தில் கொஞ்சம் நெல் போடுவார்கள் அந்த நெல் ஓமத்தில் போட்டதும் பொரிகளாகப் பொரிந்துவிடும் அந்தப் பொரியை கொள்ளிவைத்தவர் எடுத்து அங்குள்ள அவருடைய பங்காளிகள் எல்லோருக்கும் கொஞ்சங் கொஞ்சம் கொடுப்பார் இதற்குள் கிணற்றுக்கு வந்த பெண்களில் கல்யாணமான சுமங்கலியாக இருக்கும் பெண்கள் எல்லோரும் குளித்துக்கொண்டு முன்னதாக வீட்டுக்குப் போய்விடுவார்கள். புருஷன் இறந்து போன முண்டச்சிப் பெண்கள் மட்டும் சில பேர், கிணற்றில், இறந்து போனவருடைய மனைவியின் அருகில் இருப்பார்கள் இறந்து போனவருடைய மனைவியை இரண்டு முண்டச்சிகள் சேர்ந்து கிணற்றுக்குள் கூட்டிச் சென்று அந்தப் பெண்ணை அப்படியே தண்ணீரில் மூழ்க வைத்து அவள் கழுத்தில் இருக்கும் பூமாலையையும் தலையில் இருக்கும் பூ. இவைகளை எல்லாம் எடுத்துக்கிணற்று தண்ணீரில் போட்டு விடுவார்கள். பிறகு அந்தப் பெண்ணின் —

நெற்றியில் இருக்கும் பொட்டையும் அழித்துவிட்டு அப்படியே ஈரச்சேலையுடன் கிணற்றை விட்டு மேலே கூட்டி வந்து தெற்குமுகமாக உட்கார வைத்து அப்போது அந்தப்பெண்ணின் பிறந்தவன் ஒரு புதிய சிகப்புச் சேலையைக்கொண்டு வந்து அந்தப்பெண்ணின் தலையில் முக்காடு போட்டுவிட்டு அழுவார். பிறந்தவன் அப்புறம் சென்றபிறகு அருகில் இருக்கும் பெண்கள் இருவரும் பிறந்தவன் போட்ட புடவையை நன்றாக விரித்து இறந்து போனவரின் மனைவியின் முகம் தெரியாமல் தலை முதல் கால்வரை போர்த்திவிடுவார்கள். இதற்குள், அப்போது புண்ணியார்ச்சனை செய்த தண்ணீரை கொல்லி வைத்தவர் எடுத்து அங்குள்ள எல்லோருக்கும் கொஞ்சம் கொஞ்சமாக கொடுப்பார். பிறகு எல்லோரும் புறப்பட்டு வீட்டுக்கு செல்வார்கள் இவர்கள் வீட்டுக்குவருவதற்குள் அங்குள்ள பெண்கள் எல்லோரும் ~~[illegible]~~ வீடுகளையெல்லாம் சாணிபோட்டு வழித்துவிட்டு ஒரு வீட்டிற்குள் தீபம் பொருத்தி வைத்திருப்பார்கள். கிணற்றிலிருந்து எல்லோரும் வந்ததும் இறந்து போனவருடைய மனைவியை தீபம் பொருத்தி வைத்திருக்கும் வீட்டிற்குள் கூட்டிச்செல்வார்கள். அவளை கிணற்றிலிருந்து பிடித்துக்கூட்டி வந்த பெண்கள் இருவரும் வீட்டிற்குள் சென்றதும் இறந்தவரின் மனைவி அங்குள்ள தீபத்தைப்பார்த்துக்கும்பிடுவாள். பிறகு அந்தப்பெண்கட்டியிருக்கும் ஈரச்சேலையை அந்தப்பெண்ணுக்குக் கட்டி கதவைச்சாத்தி அந்த வீட்டுக்குள்ளேயே அந்தப்பெண் உட்கார்ந்துகொள்ள வேண்டும்! அன்று ~~[illegible]~~ பூராவும் அந்தப்பெண்ணின் முகத்தில் யாரும் விழிக்க மாட்டார்கள் (பார்க்கமாட்டார்கள்) இதற்குள் ஆண்கள் கிணற்றிலிருந்து கொண்டு வந்த புண்ணியார்ச்சனை தீர்த்தத்தை அந்த வீடு பூராவையும் தெளித்துவிட்டு வீட்டில் உள்ளவர்களும் மற்ற உறவினர்களும் எல்லோரும் உட்கார்ந்து சாப்பிடுவார்கள். இறந்துபோனவருடைய மனைவிக்கு புருஷன் இல்லாத முண்டச்சிகள் சாப்பாடு எடுத்துக்கொண்டு போய் அந்த வீட்டுக்குள்ளேயே அந்தப் பெண்ணுக்கு சாப்பாடு போட்டுவிடுவார்கள் பிறகு உறவினர்கள் எல்லோருக்கும் வெற்றிலைபாக்குக் கொடுப்பார்கள்.

பிறகு கொள்ளி வைத்தவர் ஒரு தட்டத்தில் வெற்றிலை பாக்கும்
சேர்த்து ஐந்து பிரிவாக தனித்தனியாக வெற்றிலைக்கை வைத்து
அதை தட்டத்துடன் எடுத்துக் கொண்டு போய் தன்னுடைய
கோத்திரம் இல்லாத வேறு கோத்திரம் உள்ள ஐயர்கள் ஐந்து
பேரிடம் சென்று "என்தகப்பனார் ஆத்மா சாந்தி அடைவதற்காக
நீங்கள் எல்லோரும் (5 பேரும்) நாளைக்கு ஏகோதிஷ்ட பிரா
மணராக இருக்கவேண்டும்" என்று வெற்றிலைபாக்குத்
தட்டத்தை அவர்முன் வைத்துவிட்டு அவர்களை கும்பிடு
வார். அவர்களும் "சரி, நல்லது" என்று ஒப்புக்கொண்டு
5 ஐயர்களும் தட்டத்தில் இருக்கும் வெற்றிலை பாக்கை
எடுத்துக் கொள்வார்கள்.

பிறகு 10வது நாள் இரவு 3 அல்லது 4 மணிக்கு உறவினர்
கள் எல்லோரும் விழித்து பல் விளக்கி முகமெல்லாம் கழுவிக்கொ
ண்டு, இரண்டு முண்டச்சிப் பெண்கள் இறந்து போனவரின்
மனைவியிருக்கும் வீட்டிற்குள் சென்று அந்த அம்மாவுக்கு சாப்பி
டுவதற்கு பாலும் பழமும் கொடுப்பார்கள் பிறகு அந்தப்பெண்ணை
க்கட்டி அழுது விட்டு முண்டச்சிப்பெண்கள் அவள் அருகிலேயே
இருந்து கொள்வார்கள். கல்யாணமாகி சுமங்கலியாக இருக்கும்
பெண்கள் எல்லாம் வந்து இறந்தவரின் மனைவியை சும்மா கண்
ணில் பார்த்துவிட்டு அப்புறம் சென்று விடுவார்கள். கட்டி
அழுக மாட்டார்கள். எல்லோரும் அந்தப்பெண்ணை ஒருமுறை பார்த்
த பின்பு அந்தப் பெண்ணின் அருகில் இருக்கும் முண்டச்
சிகள் இருவரும் இறந்து போனவரின் மனைவியின் கழுத்தி
-ல் மாங்கல்யம், மூக்குத்தி, கால் மிஞ்சிகள் மற்றும் அந்தப்
பெண் வேறு நகைகள் ஏதாவது போட்டிருந்தால் அவைகளை
யெல்லாம் கழட்டி கீழே வைத்து விடுவார்கள். பிறகு இறந்
து போனவரின் பங்காளிகள் எல்லோரும் சேர்ந்து ஒரு
வெள்ளைச்சீலை புதியது எடுத்து வந்து வைத்துக்கொண்டு அந்த வீட்டின்
வெளியே தயாராக நிற்பார்கள். பங்காளிகளில் ஒருவர் ஒரு சொம்பி
ல் மஞ்சள் நீர் கரைத்து அந்தச் சொம்பின் மேல் ஒரு
வெங்கலக்குத்து விளக்கு பொருத்திவைத்து




இதை உள்ளே இருக்கும் முண்டச்சிப் பெண்களிடம் கொடுப்பார்
கள். அவர்கள் அதை வாங்கி இறந்து போனவரின் மனைவியின்
உடம்பில் இருந்து கழட்டிய நகைகளையும் மாங்கல்யத்தையும்
எடுத்து அந்த மஞ்சள் நீருக்குள் போட்டு மறுபடியும் குத்து விளக்
கை சொம்பின் மேலே வைத்து அந்த சொம்பை இறந்தவரின் மனை
வியின் கையில் கொடுப்பார்கள். அவள் அதை வாங்கி கொள்ளி வைத்த மகனை
அருகில் வரச்சொல்லி அந்தச் சொம்பை அவர் கையில் கொடுத்து
விடுவாள். அவர் அதை வாங்கிக்கொண்டு வெளியில் வந்து
விடுவார். பிறகு பங்காளிகள்

யாரோ ஒருவர் அவர்கள் எடுத்து வைத்துள்ள வெள்ளைச் சீலையைக்- கொண்டு போய் அந்தப் பெண்ணின் மேல் முக்காடு போட்டு விட்டு தன்னுடைய முகத்தின் மேல் கையை வைத்து சிறிது நேரம் அழுது விட்டு வெளியில் வந்து விடுவார். பிறகு வீட்டின் முன் வாசலில் ஒரு பலகை போட்டு வைப்ப நாவிதனைக் கூட்டி வந்து அவனிடம் இருக்கும் கிண்ணத்தில் கொள்ளிவைத்தவர் பணம் ஏதுமோய் போட்டு அத்துடன் தண்ணீர் ஊற்றுவார் கிண்ணத்தில்.

பிறகு இறந்து போனவருடைய மனைவிக்கு கட்டியிருக்கும் சிகப்புச் சீலையை அவிழ்த்து விட்டு இறந்து போனவருடைய [illegible] வேஷ்டி ஒன்றை அந்தப் பெண்ணுக்கு கட்டி வாசலில் கூட்டி வந்து அங்கு போட்டிருக்கும் பலகை மேல் உட்கார வைப்பார்கள் (தெற்குமுகத்தி யமாக) பிறகு அந்தப் பெண்ணின் தலையில் இருக்கும் மயிர்களை நாவிதன் சவரம் செய்து மொட்டை அடிப்பான். இந்தப் பூர்ணாவும் நாவிதன் சவரம் செய்து மொட்டை அடிப்பான். இந்த மொட்டை அடித்த பின் ஆண்கள், குழந்தைகள், பெண்கள் சுமங்கலியாக இருக்கும் பெண்கள் இவர்கள் யாவரும் இந்த பெண்ணைப் பார்க்க மாட்டார்கள். புருஷன் இல்லாத முண்டச்சிகள் இரண்டு பேர் சேர்ந்து அந்தப் பெண்ணிற்கு தண்ணீரில் கொஞ்சம் சாணி போட்டுக் கரைத்து அந்தப் பெண்ணின் மொட்டைத் தலையில் ஊற்றி பிறகு, தண்ணீர் ஊற்றி சுத்தமாக குளிக்க வைத்து முன்பு அந்தப் பெண் இருந்த அதே வீட்டுக்குள் கூட்டிச் சென்று பங்காளிகள் கொடுத்த வெள்ளைச் சீலையை அந்தப் பெண்ணுக்கு கட்டி அந்த வீட்டின் மூலையில் தெற்கு முகமாக உட்கார வைத்து விடுவார்கள். (இந்தப் பெண் கணவன் இறந்து போன நாளில் இருந்து மூன்று மாதம் முடியும் வரை அந்த வீட்டுக்குள்ளேயே இருந்து கொள்ள வேண்டும். வெளியில் வந்து மற்றவர்கள் முகத்தில் விழிக்க மாட்டார்கள். சாப்பாடு அந்த வீட்டின் உள்ளேயே கொண்டு போய் போட்டுவிடுவார்களாம். இந்தப் பெண் மூத்திரம் மலவாதிக்குப் போவதென்றால் மூன்று மாதம் முடியும் வரை இரவு நேரங்களில் போய்விட்டு வந்து விடுவாளாம்)

மேற்கண்ட சீர் முடிவதற்குள் 11வது நாள் காலை விடிந்து விடும். விடிந்ததும் பெண்கள் எல்லோரும் குளித்து விட்டு வந்து ஒரு ஆள் சாப்பிடும் சாப்பாட்டு அளவுக்கு சாதம் சமைத்து, குழம்பு பொரியல், அதிரசம், வடை, பாயாசம். தர்மா செய்வார்கள் பிறகு புரோகிதர் வந்து கொள்ளிவைத்தவரையும் உட்கார வைத்து புரோகிதர் மந்திரம் சொல்ல கொள்ளிவைத்தவர் புண்ணியாசகம் செய்வார். பிறகு ஒரு கிண்ணத்தில், நல்லெண்ணெயையும், ஒரு கிண்ணத்தில் சீயக்காய் தூள் கரைத்து இரண்டு கிண்ணங்களையும் ஒரு தட்டில் வைத்து —

அத்துடன் இரண்டு வெற்றிலை பாக்கு வைத்து, முன்பு ஐந்து பேர் வெற்றிலை பாக்கு வாங்கியவர்களில் ஒரு ஐயரைக் கூப்பிட்டு, எண்ணெய் சீயக்காய்த்தூளை "குளித்து விட்டு வாருங்கள்" என்று அவரிடம் கொடுப்பார் கொள்ளி வைத்தவர். அவர் அதை வாங்கிக் கொண்டு போய் குளித்து விட்டு வருவார். குளித்துவிட்டு வந்து ஒரு பலகை போட்டு அதில் மேற்கு முகமாக உட்காருவார். அப்போது கொள்ளி வைத்தவர் ஒரு தட்டத்தில் புதிய 10 முழம் வேஷ்டியும், 6 முழம் துண்டும் வைத்து குளித்துவிட்டு வந்தவரிடம் கொடுப்பார். அவர் வேஷ்டியைக் கட்டிக் கொண்டு மறுபடியும் பலகை மேல் உட்காருவார். பிறகு, அந்த இடத்தில் புரோகிதர் மந்திரம் சொல்லவும் கொள்ளிவைத்தவர் ஹோமம் வளர்த்துவார். அந்த ஹோமத்தில் சமைத்த சாதம், பலகாரம் இவைகளையெல்லாம் கொஞ்சம் கொஞ்சம் எடுத்துப்-போடுவார். பிறகு, உட்கார்ந்திருக்கும் ஐயர் முன் இரண்டு வாழை இலை போடுவார். அந்த இலைகளின் முனையை தெற்குப் பக்கமாக வைத்துப் போடுவார்கள். பின், அந்த இலையின் அருகில் ஒரு புதிய பித்தளைச் செம்பில் தண்ணீரும், புதிய டம்ளர் ஒன்றும் வைப்பார்கள். பிறகு, அந்த இலையில் சாப்பாடு, பலகாரம் எல்லாம் கொண்டு வந்து வைப்பார்கள். சாப்பாடுகள் வைத்த பின்பு கொள்ளி வைத்தவர் செம்பிலிருக்கும் தண்ணீரை யெடுத்து பலகை மேல் உட்கார்ந்-திருக்கும் ஐயர் கையில் கொஞ்சம் ஊற்றுவார். அவர் அந்த தண்ணீரை வாங்கி அவர் முன் போட்டிருக்கும் இலையைச் சுத்தி ஊற்றுவார். மறுபடியும் கொஞ்சம் தண்ணீர் ஊற்றுவார் அந்த தண்ணீரை அவர் குடித்துவிட்டு இலையில் இருக்கும் சாதம், பலகாரம் இவைகளைச் சாப்பிடுவார்.

பிறகு, அவர் சாப்பிட்டு முடிந்ததும் கை கழுவிக் கொண்டு வந்து மறுபடியும் பலகை மேல் உட்காருவார். அப்போது கொள்ளி வைத்தவர் ஒரு தட்டத்தில் வெற்றிலை பாக்கு வைத்து, அதில் பணம் 15 ரூபாய் வைத்து பலகையில் உட்கார்ந்திருக்கும் ஐயரிடம் ஐயரிடம் கொடுத்து விட்டு அவர் முன், கீழே விழுந்து கும்பிடுவார். அப்போது பணத்தையும், வெற்றிலை பாக்கையும் வாங்கிக் கொண்ட ஐயர் கையில் கொஞ்சம் பச்சரிசி எடுத்து கொள்ளி வைத்தவர் மேல் போட்டு "நீங்கள் எல்லோரும் தீர்க்க ஆயுஷுடன் இருங்கள்!" என்று ஆசீர்வதிப்பார். பிறகு, சிறிய காளைக்கன்று ஒன்று கொண்டு வந்து அவர் முன் நிறுத்தி அதன் நெற்றியில் மஞ்சத் தூளால் Ψ– சூலம் போட்டு, கழுத்திற்கு) பூமாலை போட்டு அதற்கு பூஜை செய்து வீட்டின் வெளியே முடுக்கி விடுவார்கள். இந்தக் கன்றுக்குட்டியை இறந்தவரின் மகனுடைய பையன் பிடித்து வைத்துக் கொள்வார்கள் —

கொள்வார்கள். பிறகு பலகையில் உட்கார்ந்து சாப்பிட்டு, பணம் 15 போய் வாங்கிக் கொண்ட ஐயர் அவருடைய ஊருக்குப் போய் விடுவார். போகும் போது, அவருக்கு தண்ணீர் வைத்த சொம்பு, டம்ளர் இரண்டையும் எடுத்துக் கொண்டு போய் விடுவார். பிறகு மேற்கண்ட சீர் நடந்த இடத்தில் சாணிபோட்டு வழித்துவிட்டு விட்டு கிணற்றுக்குச் சென்று எல்லோரும் குளித்துவிட்டு வருவதற்குள் வீட்டில் சமையல் ஆகிவிடும். குளித்துவிட்டு வந்ததும் எல்லோரும் சாப்பிடுவார்கள். மேற்கண்ட சீர் நடக்கும் போது பலகையில் உட்கார்ந்து சாப்பிட்ட ஐயரை கொல்லிவைத்தவர் 6 மாதம் முடியும் வரை நேரில் பார்க்கக் கூடாது. பிறகு, புரோகிதரும் புறப்பட்டு ஊருக்குப் போய் விட்டு மறுநாள் தான் வருவார்.

12 வது நாள்.

12 வது நாள் காலையில் புரோகிதர் வந்து சேருவார். பெண்கள் எல்லோரும் குளித்து விட்டு 3 பேர் சாப்பிடும் அளவுக்கு வீட்டின் வெளியே சமையல் செய்வார்கள். மற்றவர்கள் எல்லோருக்கும் வீட்டின் உள்ளே சமையல் செய்வார்கள். பிறகு, 10 வது நாள் வெற்றிலை பாக்கு வாங்கிய ஐயர்களில் மூன்று பேரைக் கூப்பிட்டு, கொல்லிவைத்தவர் ஒரு தட்டத்தில் எண்ணெய், சீயக்காய் எல்லாம் வைத்து, அத்துடன் வெற்றிலை பாக்கும் வைத்து அந்த மூன்று ஐயர்களிடமும் கொடுத்து "குளித்து விட்டு வாருங்கள்!" என்று சொல்வார். அவர்கள் குளித்து விட்டு வருவதற்குள் முதல் நாள் சீர் நடந்த இடத்தில் புரோகிதரும், கொல்லிவைத்தவரும் சேர்ந்து புண்ணியார்ச்சனை செய்து ஹோமம் வளர்த்துவார்கள். ஹோமத்தில், இந்த மூன்று பேருக்கு செய்த சாப்பாட்டில் கொஞ்சம் எடுத்துப் போட்டு ஹோமம் வளர்த்துவார்கள். இதற்குள் அந்த மூன்று ஐயரும் குளித்து விட்டு வந்து சேருவார்கள். அவர்கள் வந்ததும் மூன்று பலகை போட்டு, மூன்று பேரில் ஒருவரை மேற்கு முகமாகவும், மறுபடி ஒருவரை வடக்கு முகமாகவும், மறுபடி ஒருவரை கிழக்கு முகமாகவும் பலகைகளின் மேல் உட்கார வைப்பார்கள். பிறகு கொல்லி வைத்தவர் வந்து மூன்று பேருக்கும் மூன்று புதிய சொம்பில் தண்ணீரும், மூன்று புதிய டம்ளரும் கொண்டு வந்து வைப்பார். பிறகு, கொல்லிவைத்தவரின் மனைவி வந்து சொம்புத்தண்ணீரை எடுத்து பலகைமேல் கிழக்கு முகமாக உட்கார்ந்திருக்கும் ஐயரின் காலின் பாதங்களின் மேல் ஊற்றுவாள். இறந்து போனவரின் மூத்த மகன் (கொல்லிவைத்தவர்) வந்து அவரின் பாதங்களை கையில் தொட்டு கழுவி விடுவான். அந்த பாதம் கழுவும் தண்ணீரை ஒரு தட்டத்தில் பிடித்து தன்னுடைய மனைவி தலையிலும், தம்பிமார்கள் தலையிலும் அந்த தண்ணீரை தெளிப்பார் கொல்லிவைத்தவர். கிழக்கு முகமாக உட்கார்ந்திருக்க

ஐயருக்குச் செய்தது போலவே மற்ற இரண்டு பேர்களுக்கும் பாதங்களை கழுவி அந்த தண்ணீரை தட்டத்தில் பிடித்து மனைவி தலையிலும், தம்பிமார்கள் தலையிலும் தெளிப்பார். பிறகு ஒரு தட்டத்தில் 10 முழம் வேஷ்டி மூன்று வைத்து 6 முழம் துண்டு மூன்றும், அத்துடன் வெற்றிலை பாக்கும் வைத்துக் கொண்டு வந்து மூன்று பேருக்கும் கொடுப்பார் கொள்ளி வைத்தவர். அந்த வேஷ்டிகளை மூன்று பேரும் வாங்கிக் கொண்டு போய் கட்டிக் கொண்டு வந்து முன் போலவே பலகை மேல் உட்காருவார்கள் மூன்று பேரும். பிறகு மூன்று பேருக்கும் சந்தனம், புஷ்பம் எல்லாம் கொடுத்து விட்டு ஒவ்வொரு வர் முன்பும் இரண்டு, இரண்டு வாழை இலைகள் போடுவார்கள். ஆக, மூன்று பேருக்கும் 6 இலைகள் போடுவார்கள். அந்த இலைகளின் நுனிகள் உட்கார்ந்திருப்பவரின் இடதுகை பக்கம் இருக்கும் மாதிரி போடுவார்கள். இலைகளை போட்ட பின்பு, அந்த மூன்று இலைகளுக்கும் சாதம், பொரியல், வடை, பாயசம், அதிரசம் இவைகள் எல்லாம் கொண்டு வந்து வைப்பார்கள். பிறகு கொள்ளி வைத்தவர் வந்து சொம்பில் இருக்கும் தண்ணீரை கையில் எடுத்து மூன்று பேருடைய கையிலும் கொஞ்சம் கொஞ்சம் ஊற்றுவார். அவர்கள் அந்த தண்ணீரை வாங்கி அவரவர்களின் இலையைச் சுற்றியும் ஊற்றுவார்கள். மறுபடியும் அவர்களின் கையில் கொஞ்சம் தண்ணீர் ஊற்றுவார். இந்த முறை அந்த தண்ணீரை வாங்கி மூன்று பேரும் குடித்து விடுவார்கள். பிறகு மூன்று பேரும் அவர்கள் முன் இலையில் இருக்கும் சாதம், பலகாரம் இவைகளை யெல்லாம் சாப்பிட்டு விட்டு கைகழுவிக் கொண்டு வருவார்கள். பிறகு சாதம், குழம்பு, பாயசம், பொரியல், வடை இவைகள் எல்லாம் சேர்த்து ஒரு உருண்டையாகச் செய்து மூன்று ஐயர்கள் உட்கார்ந்திருக்கும் இடத்தில் அவர்களின் மத்தியில் ௨ தெர்ப்பைப்-புல் போட்டு தகப்பன் பெயர், கோத்திரம் இவைகளைச் சொல்லிக் கொண்டே கையில் இருக்கும் உருண்டை சாதத்தை தெர்ப்பைப் புல்லின் மேல் வைப்பார் கொள்ளி வைத்தவர். பிறகு இறந்து போனவரின் கடைசி மகன் இருந்தால் அவர் முதலில் வந்து கையில் கொஞ்சம் எள் எடுத்து அந்த சாதத்தின்மேல் போட்டு, அதன் மேல் கொஞ்சம் தண்ணீர் விடுவார். பிறகு அவர் மனைவி யிருந்தாலும் அவள் வந்து சாதத்தின் மேல் எள்ளும் தண்ணீரும் விடுவாள். அவருக்கு கல்யாணமாகாமல் இருந்தால் கடைசி மகன் ஒருவர் மட்டும் எள்ளும் தண்ணீர் விடலாம். பிறகு கொள்ளி வைத்த மகன் வந்து மேற்கண்ட முறையில் எள்ளும், தண்ணீரும் விடுவார். அதன் பிறகு, அவருடைய மனைவி (கொள்ளி வைத்தவர் மனைவி) யும் வந்து சாதத்தின் மேல் எள்ளும், தண்ணீரும் விடுவாள். பிறகு அந்த உருண்டை சாதத்தை எடுத்து கொஞ்சத்தை காகத்திற்கும், மீதி சாதத்தை

கிணற்றில் விட்டு விடுவார்கள். பிறகு, ஒரு தட்டத்தில் வெற்றிலைபாக்கு வைத்து, அத்துடன் பணம் 5 ரூபாய் வைத்து கிழக்கு முகமாக உட்கார்ந்திருக்கும் ஐயரிடம் கொடுப்பார். அவர் அந்த ரூபாயையும், வெற்றிலைபாக்கையும் எடுத்துக்-கொள்வார். மறுபடியும் அந்த தட்டத்தில் வெற்றிலைபாக்கு, பணம் 5 ரூபாயும் வைத்து வடக்கு முகமாக உட்கார்ந்திருக்கும் ஐயரிடம் கொடுப்பார். அவர் அந்த 5 ரூபாயையும், வெற்றிலைபாக்கையும் எடுத்துக் கொள்வார். மறுபடியும் அந்த தட்டத்தில் வெற்றிலை பாக்கு வைத்து அத்துடன் பணம் 10 ரூபாயும் வைத்து மேற்கு முகமாக இருக்கும் ஐயரிடம் கொடுப்பார். அந்த 10 ரூபாயும் வெற்றிலை பாக்கையும் எடுத்துக் கொள்வார். இந்த மூன்று முறையும் பணம் வைத்துக் கொடுப்பவர் கொல்லி வைத்தவர்தான்.

பிறகு கொல்லி வைத்தவரும், அவருடைய மனைவியும், மற்றும் கொல்லி வைத்தவருடைய தம்பிகள், அவருடைய மனைவிகள் எல்லோரும் பலகையில் உட்கார்ந்திருக்கும் மூன்று ஐயர்களின் முன்பு விழுந்து கும்பிடுவார்கள். அப்போது அந்த மூன்று ஐயர்களும் விழுந்து கும்பிடு பவர்களின் மேல் பச்சரிசியைப் போட்டு "நீங்கள் எல்லோரும் சகல சம்பத்துடனும், பேரன், பிள்ளைகளோடு பலகாலம் வாழ்வீர்களாக!" என்று ஆசீர் வதிப்பார்கள். பிறகு, இந்த மூன்று பேர்களின் முன்பாகவே பதினாறு தானம்(தர்மம்) கொடுக்க வேண்டும்! அது,

ஒரு பசுமாடு கன்றுடன் பிடித்து அதன் வாலின் மேல் வெற்றிலைபாக்கு வைத்து கையில் பிடித்துக் கொண்டு அப்போது, இறந்தவரின் மகன் (கொல்லிவைத்தவர்) மாட்டின் வாலின் மேல் இருக்கும் வெற்றிலைமேல் கொஞ்சம் எள் போட்டு அதன் மேல் கொஞ்சம் தண்ணீர் ஊற்றிவிட்டு, மாட்டைப் பிடித்து இறந்துபோன வரின் மருமகன் ஒருவர் கையில் கொடுத்து விடுவார்.

பிறகு, இறந்தவருக்கு சொந்தப்பூமியிருந்தால் அந்தப்பூமியில் இரண்டு ஏக்கரை தானசாசனமாக பத்திரம் எழுதி ரிஜிஸ்தர் செய்து, அந்த பத்திரத்தையும், அந்தப்பூமியின் மண் ஒருபிடி இவைகளை எல்லாம் ஒரு தட்டத்தில் வைத்து அதன் மேல் கொஞ்சமாக எள்ளும் தண்ணீரும் கொல்லிவைத்தவரும் அவர் மனைவியும் ஊற்றி விட்டு பிறகு, கொல்லிவைத்தவர் அந்த தட்டத்தை கையில் எடுத்து, அங்குள்ள யாரோ ஒரு பிராமணரிடம் கொடுப்பார். பிறகு, நெல் ஒருபடி, பணம் 5 ரூபாய், ஒருகிண்ணத்தில் நெய், தட்டத்தில் 10 வெல்லம், எள் ஒருபடி, தங்கம், வெள்ளி, துணிக்கிடை, செருப்பு(காலணி), விசிறி, கருப்புக்கம்பளி, உட்காரும் மரப்பலகை, புதுச்சொம்பு, புதியவேஷ்டி, விபூதிப்பை இவைகள் எல்லாம் தானம் கொடுப்பார்கள். இவைகளையெல்லாம் கொடுப்பது கொல்லிவைத்தவர்தான். பிறகு,

சமைத்த சாதத்தில் ஒரு சாண் நீளத்திற்கு பிள்ளையார் மாதிரி உருண்டை செய்து அதை மூன்று பேர் உட்கார்ந்திருப்பவர்களின் மத்தியில் வைத்துவிட்டு பிறகு, வெண்கல சாதத்தால் ௨௪ உருண்டை செய்துவைத்திருப்பார்கள். அதை கொல்லிவைத்தவர் கொண்டு வந்து மூன்று ஐயர்கள் உட்கார்ந்திருப்பவர்களின் முன்பு 4 பக்கம் தெர்ப்பைப் புல் போட்டு அந்தப்புல்லின் மீது 4 வரிசையாக அதாவது ஒரு வரிசைக்கு 6 உருண்டை சாதமாக வைப்பார். 4 வரிசைக்-கும் ௨௪ உருண்டையை வைத்துவிடுவார். பிறகு நீளமாக உருட்டி வைத்திருக்கும் சாதத்தை (பிண்டத்தை) யும் மூன்றாகப் பிரித்து மூன்று உருண்டைகளாகச் செய்து அதே இடத்தில் வைப்பார். பிறகு அந்த ௨௪ உருண்டைக்கும், மற்ற மூன்று உருண்டைகளுக்கும் பொட்டு வைத்து, பூமாலைபோட்டு, தேங்காய் பழம் உடைத்து வைத்து ஒரு தட்டத்தில் சூடம் கொளுத்தி பூஜை செய்வர் கொல்லிவைத்தவர். பூஜை செய்யும் போது அங்குள்ள எல்லோரும் இறந்துபோனவரை நினைத்து கும்பிடு வார்கள். பிறகு கொல்லிவைத்தவர் பலகைமேல் உட்கார்ந்திருக்கும் மூன்று ஐயர்களையும் போய்வரும்படி கேட்டுக் கொள்வார். அவர்களும் சரி யென்று அவர்களுக்கு வைத்த புதிய சொம்பு, டம்ளர்களை எடுத்துக்கொண்டு அவர்களுடைய ஊருக்கு புறப்பட்டு விடுவார்கள்.

அந்த மூன்று ஐயர்களும் சென்றபின்பு புரோகிதரும், கொல்லிவைத்-தவரும் அங்கு வைத்துள்ள 27 சாத உருண்டைகளையும் எடுத்துக் கொண்டு கிணற்றுக்குச் சென்று சாத உருண்டைகளை கிணற்றில் போட்டுவிட்டு குளித்துக் கொண்டு வீட்டுக்கு வருவார்கள். இவர்கள் வருவதற்குள் மேற்கண்ட சடங்குகள் நடத்திய இடத்தை சாணிபோட்டு வழித்து சுத்தமாக வைத்திருப்பார்கள். இவர்கள் வீட்டுக்கு வந்ததும் கொல்லி வைத்தவரும், புரோகிதரும் உட்கார்ந்து புண்ணியார்ச்சனை செய்வார்கள். பிறகு ஹோமம் வளர்த்துவார்கள். பிறகு 10வது நாள் வெற்றிலை பாக்கு கொடுத்த ஐந்து ஐயர்களில் 4 ஐயர்களுக்கு தானம் கொடுத்து அனுப்பியாகிவிட்டது அல்லவா. அவர்களில் இன்னும் ஒரு ஐயர் இருப்பார் அவரைக் கூப்பிட்டு அவருக்கும் எண்ணெய் சீய்க்காய் கொடுத்து குளித்துவிட்டு வரச்-சொல்வார்கள். அவர் குளித்துவிட்டு வந்தபின்பு ஒரு பலகை போட்டு அதில் அவரை வடக்கு முகமாக உட்காரச் சொல்வார்கள். அவர் உட்கார்ந்ததும் கொல்லி வைத்தவர் ஒருதட்டத்தை எடுத்து அதில் வெற்றிலை பாக்கும், பத்து முழம் வேஷ்டி, 6 முழம் துண்டு இவைகளைவைத்து உட்கார்ந்திருக்கும் ஐயரிடம் கொடுப்பார். அவர் அதை வாங்கி வேஷ்டியைக் கட்டிக் கொண்டு வந்து மறுபடியும் பலகை

மேல் வடக்கு முகமாக உட்காருவார். பிறகு அவர் முன்பு இரண்டு இலை போட்டு அதில் சாதம், பலகாரங்கள், பொரியல் வகைகள் எல்லாம் கொண்டு வந்து வைத்து ஒரு புதிய சொம்பில் தண்ணீரும், டம்ளரும் கொண்டு வந்து அவர் முன்பு வைப்பார்கள். பிறகு கொல்லி வைத்தவர் சொம்பில் இருக்கும் தண்ணீரை எடுத்து அவருடைய கையில் கொஞ்சம் ஊற்றுவார். அந்த தண்ணீரை அவர் வாங்கி இலையைச் சுற்றியும் ஊத்துவார். மறுபடியும் அவர் கையில் கொஞ்சம் தண்ணீர் ஊற்றுவார். அந்த தண்ணீரை அவர் வாங்கி குடித்து விட்டு இலையில் இருக்கும் சாதத்தை சாப்பிடுவார். சாப்பிட்டு முடிந்ததும் ~~கையை~~ கழுவிக் கை கொண்டு வந்து மறுபடியும் பலகைமேல் உட்காருவார். பிறகு, கொல்லி வைத்தவர் ஒரு தட்டத்தில் வெற்றிலை பாக்குடன் பணம் 5 போய் வைத்து அந்த ஐயரிடம் கொடுத்துவிட்டு ~~கொல்லிவைத்தவர், [illegible]~~ ~~[illegible]~~ அவர் முன்பு கீழே விழுந்து கும்பிடுவார். இவர் மேல் பச்சரிசியை கொஞ்சம் போட்டு "தீர்க்க ஆயிஷுடன் இருங்கள்!" என்று ஆசீர்வதிப்பார். பிறகு அந்த ஐயர் அவருக்கு வைத்த சொம்பையும், டம்ளரையும் எடுத்துக் கொண்டு போய் விடுவார். அவர் போன பின்பு, சாதம், பாயாசம் இரண்டும் சேர்த்து ஒரு உருண்டையாகச் செய்து, தகப்பனர் பெயரையும், கோத்திரத்தையும் சொல்லிக்கொண்டே அந்த பிண்டத்தை (சாதத்தை) கீழே வைப்பார் கொல்லி வைத்தவர். பிறகு, அந்த உருண்டைக்கு பொட்டு வைத்து, பூமாலை போட்டு, ஒரு தட்டத்தில் சூடம் பொருத்தி பூஜை செய்வார். உறவினர்கள் எல்லோரும் சாமி கும்பிடுவார்கள். பிறகு, கொல்லி வைத்தவர் அந்த சாத உருண்டையை எடுத்து காகத்திற்கு வைத்து விட்டு, கை கழுவிக் கொண்டு வந்து உறவினர்களுடன் உட்கார்ந்து சாப்பிடுவார். இத்துடன் 12வது நாள் சீர் முடிந்தது.

13வது நாள். சுப ஸ்வீகாரம்

இன்று வீடுவாசல் எல்லாம் பூசிவழித்து விட்டு இந்தப் பதிமூன்றாவது நாளில், இறந்துபோனவரின் மகள் எல்லோரும் அதிரசமும் அவல்பொரி, பொரித்து அதில் வெல்லத்தில் பாவுக்காய்ச்சி அவல் பொரியை அதில் போட்டு கலந்து கொண்டு வருவார்கள்.


இறந்தவருடைய மகனுடைய மகள் (இறந்தவரின் பெண்பேத்திகள்) லட்டு, கடலை உருண்டை ஆகிய பலகாரங்கள் செய்து கொண்டு வருவார்கள்.

இறந்தவருடைய மகனுடைய மகள்கள் எல்லோரும் எள்ளு உருண்டை மாவும், பாசிப்பயறு மாவு உருண்டையும் செய்து கொண்டு வருவார்கள்.

கொல்லி வைத்தவருடைய மாமனார் வீட்டிலிருந்து கொல்லி வைத்தவருக்கு-

வேஷ்டியும், அவர் மனைவிக்கு சேலையும் எடுத்து வருவார்கள். அத்துடன் பருப்புத்தேங்காய் இரண்டு செய்து வைத்துக் கொண்டு வருவார்கள். பிறகு, நடுவீட்டில் பட்டுப்பாயி ஒன்று விரித்து, அதில் கொல்லிவைத்தவர், அவருடைய மனைவி, இறந்துபோனவரின் கடைசிமகன், அவருடைய மனைவி, இறந்து போனவரின் மகள்கள், அவர்களுடைய புருஷர்கள் எல்லோரும் ஆக, இவர்களையெல்லாம் பட்டுப்பாயில் கிழக்கு முகமாக உட்கார வைப்பார்கள். இவர்களின் முன்பு வாழை இலை ஒன்று போட்டு, அதன் மேல் பச்சரிசிபோட்டு, அதன் மேல் கலசம் ஒன்று வைத்து தண்ணீர் ஊற்றி, அந்த தண்ணீரில் கொஞ்சம் பால், நெய், தயிர், மாட்டுக் கோமயம் (மாட்டுக்கன்றின் சிறுநீர்), மாட்டுச்சாணி கொஞ்சம் ஆக இவைகள் எல்லாம் போட்டு கலந்துவிட்டு கலசத்தின் மேல் மாந்தழைகள் வைத்து தேங்காய் ஒன்று வைப்பார்கள். பிறகு, புண்ணியார்ச்சனை கலசத்தின்முன்பு வெற்றிலை பாக்கு வைத்து, தேங்காய் பழம் உடைத்துவைத்து விட்டு, இறந்து போனவரின் மகள்கள், பேத்திகள் எல்லோரும் கொண்டுவந்த பலகாரங்கள் எல்லாம் கொண்டு வந்து அவ்விடத்தில் வைத்துவிட்டு, புரோகிதர் வடக்கு முகமாக உட்கார்ந்து மந்திரம் சொல்லுவார், கொல்லிவைத்தவர் புண்ணியார்ச்சனை செய்வார். பிறகு, அந்த இடத்தில் சில அரசங்குச்சிகளைப் போட்டு அதில் நெருப்பு வைத்து, நெய் விட்டு ஹோமம் வளர்த்துவார் கொல்லிவைத்தவர். அப்போது புரோகிதர் மந்திரம் சொல்வார்.

## நவக்கிரக பூஜை:

பிறகு, அதே இடத்தில் பூமியில் கொஞ்சம் நெல்போட்டு பரவச் செய்து அதன் மேல் வாழை இலை ஒன்று போட்டு, இலைமேல் கோதுமை ஒருபக்கம், துவரை ஒருபக்கம், பச்சரிசி ஒரு பக்கம், பாசிப்பயிறு ஒரு பக்கம், மொச்சைப்பயிறு ஒருபக்கம், பச்சைக்கடலை ஒருபக்கம், எள்ளு ஒருபக்கம், உளுந்து ஒருபக்கம், கொள்ளு ஒரு பக்கம் ஆக, 9 வகை தானியங்களையும் வாழை இலைமேல்  ← இப்படி தனித்தனியாக வைப்பார்கள். இந்த ஒன்பது வகை தானியங்களும் நவக்கிரக மூர்த்திகளை குறிப்பதாகும். பிறகு, இவைகளின் முன்பு தேங்காய் பழம் உடைத்து வைத்து விட்டு 9வகை குச்சிகளால் ஹோமம் வளர்த்துவார்கள் அது: அத்திக் குச்சி, ஆலங்குச்சி, அரசங்குச்சி, நாயுருவிக்குச்சி, வன்னிக்குச்சி, கருங்காலிக்குச்சி, வெள்ளை எருக்கிலைக் குச்சி, தெர்ப்பைப் புல், வெள்ளை அருகம்புல், ஆகிய ஒன்பது குச்சிகளாகும். மேற்கண்ட குச்சிகளில் நவக்கிரக மூர்த்திகளுள்: சூரியனுக்கு வெள்ளை எருக்கலை குச்சியும், சந்திரனுக்கு ஆலாங்குச்சியும், செவ்வாயிக்கு கருங்காலிக் குச்சியும், புதனுக்கு நாயுருவிக்குச்சியும், வியாழனுக்கு (குரு) அரசங்குச்சியும், சுக்கிரனுக்கு-

அத்திக்குச்சியும், சனீஸ்வரனுக்கு வன்னிக்குச்சியும், ராகுவுக்கு வெள்ளை அருகம்புல்லும், கேதுவுக்கு தர்ப்பைப்புல்லும் இப்படியாக ~~[illegible]~~ 9 வகை இச்சிகளையும் ஹோமத்தில் போட்டுக் கொண்டே நெய் விட்டு ஹோமம் வளர்த்து வார் கொல்லிவைத்தவர். புரோகிதர் மந்திரம் சொல்லுவார். அத்துடன் எள்போட்டு செய்த சாதமும் கொஞ்சம் ஹோமகுண்டத்தில் போடு வார். பிறகு ஹோமகுண்டத்திற்கு தேங்காய் பழம் உடைத்து வைத்து சூடம் பொருத்தி பூஜை செய்வார் கொல்லிவைத்தவர். எல்லோரும் சாமி கும்பிட்டுவிட்டு விபூதி எடுத்துக் கொள்வார்கள். பிறகு புண்ணியார்ச்-சனைக்கலசத்தில் இருக்கும் பஞ்சகோமய தீர்த்தத்தை புரோகிதர் எடுத்து அங்குள்ள எல்லோருக்கும் கையில் கொஞ்சம் தீர்த்தம் ஊத்து வார். அவர்கள் எல்லோரும் அந்த தீர்த்தத்தை கையில் வாங்கி குடித்து விடுவார்கள். பிறகு அங்குள்ள ஐயர்கள் எல்லோரும் சந்தனப் பொட்டு வைத்துக் கொள்வார்கள். முக்கியமாக இறந்து போனவரின் பங்காளிகள் எல்லோரும் இந்த 13 வது நாள்தான் பொட்டுவைத்துக் கொள்வார்கள். அதற்கிடையில் பொட்டு வைத்துக் கொள்ள மாட்டார்கள்

பிறகு, உறவினர்கள் எல்லோரும் அவரவர்களுக்கு இஷ்டப்பட்டது போல் 5 ரூபாய், 10 ரூபாய் மொய் கொடுப்பார்கள். அந்த மொய் பணங்களை ஒவ்வொருவரும் கொடுக்கக் கொடுக்க, அதை புரோகிதர் வாங்கி மொய் கொடுப்பவர்களின் பெயரைச் சொல்லிக் கொண்டே கொல்லிவைத்த வரிடம் கொடுப்பார்.

பிறகு கொல்லிவைத்தவருக்கும், அவர் மனைவிக்கும் அவருடைய மாமனார் வீட்டிலிருந்து எடுத்து வந்த வேஷ்டி, சீலை இவைகளை யெல்லாம் ஒரு தட்டத்தில் வைத்துக் கொண்டுவந்து புரோகிதரிடம் கொடுப்பார்கள். புரோகிதர் அதை வாங்கி கொல்லிவைத்தவருக்கும், அவருடைய மனைவிக்கும் கொடுக்கும் போது வேஷ்டி, சீலை எடுத்து வந்தவர்களின் பெயரைச் சொல்லிக் கொண்டே கொடுப்பார். இறந்து போனவரின் மற்ற மகனுகள் எல்லோருக்கும் கல்யாணமாகியிருந்தால், அவர்கள் எல்லோருக்கும் அவர்களுடைய மாமனார் வீட்டிலிருந்து வேஷ்டி, சீலை எல்லாம் கொண்டு வந்து புரோகிதரிடம் கொடுப்பார்கள். புரோகிதர் அதை வாங்கி அவர்களின் பெயரைச் சொல்லிக் கொண்டே வேஷ்டி, சீலை உரியவரின் கைகளில் கொடுப்பார். இறந்து போனவரின் மகனுகள் கல்யாணமாகாமல் இருந்தால் அவர்களுக்கெல்லாம், அவர்களுடைய அக்கா, தங்கை எல்லாம் சேர்ந்து வேஷ்டி துண்டு கொடுப்பார்கள்.

இறந்து போனவருடைய மகனுக்கு எத்தனை பேர்களுக்கு கல்யாணம் ஆகியிருந்தாலும் அவர்களுக்கும், அவர்கள் புருஷன்மார்களுக்கும் இறந்துபோனவர் குடும்பத்திலிருந்து வேஷ்டி சேலை எடுத்துக் கொடுப்பார்கள். கல்யாணமாகாத பெண்கள் வீட்டில் இருந்தால், அவர்களுக்கெல்லாம் பெற்றோர்களின் வீட்டில்தான் புதியதுணிகள் எல்லாம் எடுத்துக் கொடுப்பார்கள். மேற்கண்டவர்கள் எல்லோருக்கும் துணிகள் கொடுக்கும் போது, ஒவ்வொருவருக்கும் 4 அணா வீதம் வைத்துக் கொடுப்பார்கள். இந்தத் துணிகள் கொடுக்கும் போது, துணிகள் எல்லாம் புரோகிதரிடம் கொடுத்துத்தான் கொடுப்பார்கள். பிறகு அங்குள்ள பலகாரங்களை எடுத்து மடியில் வைத்தவர்கள், வேஷ்டி சேலை கொடுத்தவர்கள் எல்லோருக்கும் கொடுப்பார்கள். பிறகு மாமன் மைத்துனர் மனைவி ஒருத்தியும், பங்காளியின் மனைவி ஒருத்தியும் ஆக இருவரும் சேர்ந்து ஒரு தட்டத்தில் தண்ணீர் ஊற்றி அதில் மஞ்சத்தூள் சுண்ணாம்பு கலந்து பட்டுப்பாயில் உட்கார்ந்திருப்பவர்களுக்கெல்லாம் ஆலாத்தி சுத்துவார்கள். ஆலாத்தி சுற்றிவிட்டு அந்த தண்ணீரைக்கொண்டு போய் வாசலில் ஊற்றிவிடுவார்கள்.

பிறகு ஒரு தட்டத்தில் பத்து முழம் வேஷ்டி, 6 முழம் துண்டு, வெற்றிலைபாக்கு, பணம் 50 ரூபாய் இவைகள் எல்லாம் வைத்து அதை கொள்ளிவைத்தவர் கொண்டு வந்து புரோகிதரிடம் கொடுப்பார். அவர் அதைவாங்கிக்கொண்டு அவருடைய ஊருக்குப் போய்விடுவார். அவர் போன பின்பு உறவினர்கள் எல்லோரும் சாப்பிடுவார்கள். சாப்பிட்டு முடிந்ததும் அவரவர்கள் ஊருக்குப் போய்விடுவார்கள்.

<u>இத்துடன் ஐயர் கல்யாணச்சீர் முடிந்தது.</u>

குறிப்பு:

1, பிணத்திற்கு குளிப்பாட்டும் போது, இறந்தவரின் மகன், மகள் இவர்களுடைய பையன்கள் எல்லோரும் <u>நெய்ப்பந்தம்</u> பிடிப்பார்கள். நெய்ப்பந்தம் பிடிக்கும் பேரன் மார்களுக்கெல்லாம் இறந்துபோன குடும்பத்திலிருந்து தங்கமோதிரம் செய்து போடுவார்கள்.

பெண் பேத்திகள் இருந்தால் அவர்களுக்கெல்லாம் இறந்து போனவரின் குடும்பத்திலிருந்து புதிய துணிகள் எடுத்துக் கொடுப்பார்கள்.

2, பத்தாவது நாள் எல்லோரும் கிணற்றிலிருந்து வீட்டுக்கு வந்ததும் சாப்பிடும் சாப்பாட்டுச்செலவு பூராவும் இறந்துபோனவருடைய மூத்தமகனுடைய செலவுதான்.

3, 11வது நாள் மாட்டுக் கன்று ஒன்று நெற்றியில் மஞ்சள் சூலம் போட்டு விடுகிறார்கள் அல்லவா? அது வசதியுள்ளவர்களாக இருந்தால் அந்த மாதிரி செய்வார்கள் வசதியில்லாதவர்கள் ஒரு தேங்காயிக்கு மஞ்சளில் சூலம் போட்டு அதை இறந்து போனவருடைய மகனுடைய மகன் கையில் கொடுத்து விடுவார்கள்.

4. 12வது நாள் பசுமாடு, பூமி இவைகள் எல்லாம் தானம் கொடுக்கிறார்கள் அல்லவா? அதுவும் அவரவர்கள் குடும்பத்து வசதியைப் பொருத்ததுதான்.

5. இறந்து போன அன்று குத்து விளக்குப் பொருத்திவைப்பது 13வது நாள் சீர் முடியும் வரை அணையாமல் எரிந்து கொண்டே இருக்க வேண்டும்.

6 இறந்து போனவரின் மூத்த மகனுக்கு பிணத்தின் அருகில் பொருத்தி வைத்த குத்து விளக்கையும், மற்றும் ஒரு பித்தளைக் குடம், ஒரு பித்தளைக்-கிண்டா என்று ஆக மூன்று சாமானங்களையும் கொடுப்பார்கள். தவிர, இறந்து போனவருக்கு மேலும் பெண்கள் இருந்தால், அவர்களுக்கெல்லாம் ஒரு பித்தளைப் பாத்திரமோ அல்லது சீலையோ எத்தனை பெண்கள் இருந்தாலும் அத்தனை பேர்களுக்கும் ஆளுக்கொன்று வாங்கிக் கொடுப்பார்கள்.

7. இறந்து போனவருக்கு வருஷா வருஷம் இறந்த நாள் அன்று பார்த்து திதி கொடுக்கும் போது, யாரோ இரண்டு ஐயரைக் கூட்டி வந்து இப்போது 12வது நாள் செய்தது போல் அந்த ஐயர்களுக்கு வேஷ்டி, துண்டு கொடுத்து சாப்பாடு போடுவார்கள்.

---

8. கல்யாணமான பெண் இறந்து விட்டாலும் மேற்கண்ட முறையில்தான் சடங்கு நடைபெறும். குளிப்பாட்டிய பின் கோடி போடும் போது, ஆண்களுக்கு வெள்ளைத்துணியில் கோடி போடுவார்கள். ஆனால், பெண் இறந்துவிட்டால் சிகப்புத்துணியில்தான் கோடி போடுவார்கள்.

தவிர, சுமங்கலியாக இருக்கும் பெண்கள் இறந்து விட்டால், அவளுக்கு சிகப்புத்துணியில் கோடி போட்டு விட்டதும் அவளுடைய நெஞ்சின் மேல் தேங்காய் பழம், வெற்றிலை பாக்கு, குங்குமம், பூ இவைகள் எல்லாம் வைத்து, அந்தக் கோடித்துணியுடன் சேர்த்து (இந்த சாமானங்களை இறந்து போன பெண் மடியில் கட்டியிருப்பது போல்) பிணத்தின் உடம்புடனும், பாடையுடனும் சேர்த்து கட்டிவிடுவார்கள்.

பிறகு, ஒரு மண் விளக்கில் எண்ணெய் ஊற்றி, தீபம் பொருத்தி அந்த தீபத்தை பிணத்தின் நெஞ்சின் மேல் இருக்கும் கைகளின் மேல் வைத்து விடுவார்கள். அதை இறந்து போனவருடைய மூத்தமகன் வந்து எடுத்து தீபம் அணைந்து

விடாமல் கொண்டுபோய் வீட்டுக்குள் இருக்கும் விளக்கு மாடத்தில் வைத்து விடுவார்.

9. புருஷன் இல்லாத மூண்டச்சி இறந்துவிட்டாலும் சிகப்புச் சீலைதான் கோடி போடுவார்கள்.

10. சுமங்கலிப் பெண்கள் இறந்துவிட்டால் அந்தப் பெண்ணுக்கு வருஷா வருஷம் திதி கொடுக்கும் நாளில் மாமன் மைத்துனர் ஐயர் இவர்களும் அவர்களுடைய மனைவிகளில் ஒருத்தியையும் கூட்டிவந்து அவர்களையெல்லாம் குளிக்கச்செய்து பலகையில் உட்கார வைத்து ஆண்கள் இவர்களுக்கும் வேஷ்டி துண்டுகளும், பெண்ணுக்கு சீலை ஜாக்கெட்டும் புதியதாக எடுத்துக்கொடுக்க வேண்டும். இவைகளைக் கொடுப்பது இறந்துபோன பெண்ணுடைய குடும்பந்தான்.

11. ஆண், பெண் யார் இறந்துவிட்டாலும் அவர்களுக்கு கொள்ளிவைத்த மகன், பிணத்தை தகனம் செய்த மறுநாள் எல்லோரும் சென்று காடாத்து விட்டு அங்கம் பொறுக்கிவைத்து விட்டு எல்லோரும் கிணற்றுக்கு வந்து குளிப்பதற்கு முன்பு கொள்ளி வைத்த மகன் தன்னுடைய தலையிலிருக்கும் மயிர், கண் சூடு, கண் புருவம் இவைகளில் இருக்கும் மயிர்களைத்தவிர உடம்பில் மற்ற இடங்களில் இருக்கும் மயிர்களையெல்லாம் நாவிதனிடம் சவரம் செய்து கொண்டு, மறுபடி எல்லோரும் குளித்துக்கொண்டு வீட்டுக்கு வருவார்கள்.

12. 9வது நாள் காலையில் எழுந்ததும் கொள்ளி வைத்தவரும் அவருடன் புரோகிதர், மற்றும் ஒரு ஐயர் ஆக மூன்று பேரும் மயானத்திற்குச் சென்று அங்கு புதைத்துவைத்திருக்கும் அங்கத்தை (எலும்பை) அப்படியே சொம்புடன் எடுத்து ஒரு புதிய துண்டில் வைத்து மூட்டைகட்டி எடுத்துக்கொண்டு வீட்டுக்கு வராமல் மயானத்திலிருந்து அப்படியே கொடுமுடி, அல்லது பவானி ஈ.ரோடு ஏதோ ஒரு பக்கம் சென்று அங்குள்ள காவிரி ஆற்றின் மேட்டில் போய் கொள்ளிவைத்தவர் அங்கம் இருக்கும் சொம்பை எடுத்து இரண்டு கையிலும் வைத்து கிழக்கு முகமாக நின்று கொள்வார். அப்போது புரோகிதர் ஏதோ மந்திரம் சொல்வார். பிறகு மூத்தமகன் (கொள்ளிவைத்தவர்) ஆற்றின் தண்ணீருக்குள் இறங்கி சொம்பில் இருக்கும் இறந்தவரின் தலை, கால், கை, மார்பு, முழங்கால் ஆகிய எலும்புகளை ஒவ்வொன்றாக எடுத்து தண்ணீரில் விடுவார். அந்த ஒவ்வொரு எலும்பையும் தண்ணீரில் விடும்போது, ஒவ்வொரு எலும்புக்கும் ஒவ்வொரு மந்திரம் சொல்வார் புரோகிதர். எலும்புகளையெல்லாம் ஆற்றில் விட்டு விட்டதும் சொம்பையும் ஆற்றில் விட்டு விட்டு அதைக்கட்டிக் கொண்டுபோன

புதிய துண்டை தண்ணீரில் நனைத்து எடுத்துக் கொண்டு, குளித்துக் கொண்டு அஞ்சு பொழுதுக்குள் வீடு வந்து சேருவார்கள்.

7 வது நாள் அங்கம் கொண்டு போய் ஆற்றில் விடுவதற்கு வசதிப் படாதவர்கள், மூன்றாவது மாதம் கொண்டு போய் மேற்கண்ட முறையில் ஆற்றில் அங்கம் விட்டு விடுவார்கள்.

13. கொல்லி வைத்தவருக்கு அவருடைய மாமனார் வீட்டிலிருந்து 16 வது நாள் வேஷ்டி சீலை கொடுக்கும் போது அத்துடன் ஒரு தங்க மோதிரம் செய்து கொண்டு வந்து கொல்லி வைத்தவருக்கு கொடுப்பார்களாம். இந்த மோதிரத்தை பவித்திரத்து மோதிரம் என்று சொல்வார்களாம். இந்த மோதிரம் கொல்லி வைத்த கைக்கு கண்டிப்பாய் போட வேண்டும்.

14. கொல்லி வைத்தவர், இறந்து போன நாளிலிருந்து மூன்று மாதம் முடியும் வரை எண்ணெய் தேய்த்து குளிக்கக் கூடாது. மூன்று மாதம் முடிந்ததும் அவருடைய அக்காளும், தாய் மாமன் வீடு, அத்தை வீடு ஆக மூவரும் இவருக்கு வேஷ்டி துண்டு எல்லாம் எடுத்துக் கொண்டு வந்து வைத்து விட்டு கொல்லி வைத்தவரிடம் மூன்று குடும்பமும் கொஞ்சம் பணம் கொடுப்பார்கள். அவர் அந்த பணத்தை வாங்கிக் கொண்டு போய் சமையலுக்குத் தேவையான சாமான்கள் எல்லாம் வாங்கி வந்து சமையல் செய்வார்கள். சமையல் செய்து முடிந்ததும், கொல்லி வைத்தவருக்கு எண்ணெய் தேய்த்து குளிக்க வைத்து, புதிய வேஷ்டி துண்டைக் கொடுத்து கட்டச் செய்து பிறகு எல்லோரும் சாப்பிடுவார்கள். அதன் பின்பு இவர் எப்போது வேண்டுமானாலும் எண்ணெய் தேய்த்துக் குளிக்கலாம்.

15. மூன்று மாதம் முடிந்து அங்கம் கொண்டு போய் விடுவதாக இருந்தால் அங்கம் கொண்டு போய் விட்டு விட்டு வந்த பிறகு தான் மேற்கண்ட எண்ணெய் தேய்க்கும் சடங்கு நடக்கும்.

முற்றும்.

---

இறந்தவர்களுடைய ஆத்மா சாந்தியடையவும், இந்த சடங்குகளை சொன்ன சுந்தரக் குருக்கள் அவர்களுக்கு என் நன்றியை தெரிவித்துக் கொண்டும் விடை பெறுகிறேன். வணக்கம்.

இப்படிக்கு
K. Sundaram
14/1/68